# அரசு ஊழியர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாத இதழ்
ஆசிரியர்: ஆ.செல்வம்

அக்டோபர் - 2024
தனிப்பிரதி ரூ.20



சாம்சங் தொழிலாளர்கள்
காலவரையற்ற வேலைநிறுத்தம்;

## அடக்குமுறைக்கும் மிரட்டலுக்கும் அடிபணியாத உரிமை போராட்டம்..

# தேர்தல்கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி அனைத்து அரசு அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் 19.09.2024




































அரசு ஊழியர்

மாத இதழ்

2024 அக்டோபர்

மலர்:45 இதழ்:10

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு

ஆசிரியர்: ஆ.செல்வம்

ஆசிரியர் குழு:

மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி
9677003178

முகவரி:

பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

அச்சகம்:

சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200

தனி இதழ் : ரூ.20



இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.


# உள்ளே...


1. சாம்சங் தொழிலாளர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தம்; அடக்குமுறைக்கும் மிரட்டலுக்கும் அடிபணியாத உரிமை போராட்டம்.. *தலையங்கம்* ........ *4*
2. மறுக்கப்பட்ட உரிமைகளை போராட்டங்களால் மீட்போம்! *பொதுச் செயலாளர் மேசையிலிருந்து* ........ *5*
3. செப்டம்பர் 20: சிந்துவெளி நாள் ........ *9*
4. செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியும் (AI) வேலைவாய்ப்பில் வீழ்ச்சியும்... ........ *13*
5. 15 ஆம் மாநில மாநாடு வரவேற்புக்குழு அமைப்புக் கூட்டம் ........ *14*
6. நேரத்தோடு முன்னேறுங்கள்! ........ *15*
7. அஞ்சலி ........ *16*
8. தமிழக முதல்வரின் தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி, 19.09.2024 அன்று அனைத்து அரசு அலுவலகம் முன்பாக கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் ........ *17*
9. ஆசை ........ *21*
10. 26.09.2024 அகில இந்திய கோரிக்கை நாள் ஆர்ப்பாட்டம் ........ *22*
11. வாசகர் கடிதம் ........ *25*
12. எள்ளளவும் பயனற்ற Unified Pension Scheme ........ *26*
13. போராடும் சாம்சங் தொழிலாளர்களுக்கு ஆதரவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 1.10.2024 அன்று ஆர்ப்பாட்டம் ........ *28*
14. நூல் வெளியீடு, எழுத்தாளர்களுக்கு பாராட்டு ........ *28*
15. 22.09.2024 அன்று நடைபெற்ற ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் கூட்ட முடிவுகள் ........ *29*
16. வட்ட மாநாடுகள் ........ *30*
17. வாசகர் கடிதம் ........ *34*

தலையங்கம்

# சாம்சங் தொழிலாளர்கள் காலவறையற்ற வேலைநிறுத்தம்; அடக்குமுறைக்கும் மிரட்டலுக்கும் அடிபணியாத உரிமை போராட்டம்..

சங்கம் அமைக்கும் உரிமை வேண்டும் என்ற முழக்கத்தை முன்வைத்து சாம்சங் இந்தியா தொழிலாளர்கள் சங்கம் நடத்திவரும் காலவரையற்ற வேலை நிறுத்தம் மிகுந்த கவனிப்பையும் போராட்டத்தை முறியடிக்க சாம்சங் இந்தியா நிறுவனம் மேற்கொள்ளும் செயல்பாடுகளும் இந்தியாவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரம் சிப்காட் பகுதியில் சாம்சங் இந்தியா நிறுவனம் செயல்பட்டு வருகிறது இந்நிறுவனம் தொடங்கப்பட்டு 16 ஆண்டுகள் கழித்து இந்நிறுவன தொழிலாளர்கள் தங்களுக்கு என ஒரு சங்கத்தை உருவாக்க வேண்டும் என்று முடிவு செய்து கடந்த ஜூன் மாதத்தில் சாம்சங் இந்தியா தொழிலாளர் சங்கத்தை தொடங்கியுள்ளனர். குறைந்த சம்பளம் சட்டத்துக்கு புறம்பான பணி நிலமைகள் அனுமதிக்கப்பட்ட விடுப்பை கூட பயன்படுத்த முடியாத சூழல் போன்ற காரணங்கள் சங்கம் தமக்குத் தேவை என்பதை தொழிலாளர்களுக்கு உணர்த்தியதன் காரணமாக சங்கம் அமைக்கப்பட்டுள்ளது சங்கம் ஆரம்பித்து பதிவிற்காக விண்ணப்பித்ததில் இருந்தே நிர்வாகம் பலவிதமான கெடுபிடிகளையும் அடக்கு முறையும் ஏவியுள்ளது. இந்த சங்கத்திற்கு போட்டியாக நிர்வாகமே வேறொரு சங்கத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில் தான் சாம்சங் இந்திய தொழிலாளர் சங்கம் 'சங்கம் அமைக்கும் உரிமையை' முதன்மையான கோரிக்கையாக முன்வைத்து செப்டம்பர் 9 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தை நடத்தி வருகின்றனர். சாம்சங் இந்தியா நிறுவனத்தின் முன்பாக போராட்டம் நடத்தக்கூட அனுமதி மறுக்கப்பட்டு ஒரு கிலோ மீட்டருக்கு அப்பால் போராட்டம் நடைபெற்று வருகிறது. தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரிடம் தெரிவிக்க சென்ற தொழிலாளர்களை காவல்துறை கைது செய்துள்ளது. முன்னணி தலைவர்களை முன்னெச்சரிக்கையாக கைது செய்ததும் நிகழ்ந்துள்ளது. மாநில அரசு தலையிட்டு வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரக் கோரி செப்டம்பர் 18 சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் ஆர்ப்பாட்டம் நடத்த 12 சங்கங்களை கொண்ட அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பு அழைப்பு விடுத்திருந்தது. ஆனால் போராட்டத்திற்கு அனுமதி மறுத்த காவல்துறை அனைவரும் கைது செய்துள்ளது.

சாம்சங் தொழிலாளர் போராட்டத்தை அரசு தலையிட்டு முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இடதுசாரி கட்சிகளின் ஆர்ப்பாட்டமும் காவல்துறையால் அனுமதி மறுக்கப்பட்ட நிகழ்வும் நடைபெற்றுள்ளது.

பெரும்பான்மை தொழிலாளர்கள் சங்கம் அமைத்து அதை பதிவு செய்யக்கூட முடியாத தடைகளை ஏற்படுத்துவதும், சட்டங்களை மதிக்காத சாம்சங் இந்தியா நிறுவனம் பெரும்பான்மை உறுப்பினர்கள் கொண்ட சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண மறுப்பதும், போராட்டத்தை மிரட்டி நசுக்க நினைப்பதும் ஏற்புடையதல்ல.

சாம்சங் இந்தியா நிறுவனம் சட்டப்படி செயல்பட துரித நடவடிக்கை எடுக்காத அரசின் நிலைப்பாடும், சங்கம் பதிவு செய்வதில் ஏற்படும் தாமதத்தை கலைந்து விரைவாக பதிவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்காததும், ஆதரவாக நடைபெறும் தொழிற்சங்கங்கள் இடதுசாரி கட்சிகளின் போராட்டத்திற்கு அனுமதி மறுப்பதும், உரிய முறையில் பேச்சுவார்த்தை நடத்திட சாம்சங் நிறுவனத்தை நிர்ப்பந்திக்காதது போன்ற தமிழ்நாடு அரசின் செயல்பாடுகள் மிகுந்த அதிர்ச்சியும் அச்சத்தையும், மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

இது தொழிற்சங்கங்களும் ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள அமைப்புகளும் விழிப்புடன் செயல்பட வேண்டிய அவசியத்தை உணர்ந்து விழித்து கொள்ள அடிக்கப்பட்ட எச்சரிக்கை மணியாகும். சாம்சங் இந்தியா தொழிலாளர்களின் போராட்டம் அவர்களுடைய கோரிக்கைக்கான போராட்டம் மட்டுமல்ல, இன்றைய காலகட்டத்தில் சங்கத்தின் தவிர்க்க முடியாத தேவையை உணர்த்துகின்ற போராட்டமாகவும் அமைந்து வரலாற்றில் இடம் பிடித்துள்ளது.

- ஆசிரியர் குழு ●

# மறுக்கப்பட்ட உரிமைகளை போராட்டங்களால் மீட்போம்!

பா.ஜ.க. கூட்டணி அரசு மூன்றாவது முறையாக பதவியேற்று நூறு நாள் முடிந்ததையொட்டி ஒன்றிய உள்துறை அமைச்சர் சாதனை கையேட்டை வெளியிட்டுள்ளார். அதை தொடர்ந்து அளித்த பேட்டியில் இந்த ஆட்சியின் அவலங்களை எடுத்துக் காட்டுவதாகவே அமைந்துள்ளது.

பத்தாண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட வேண்டிய மக்கள் தொகை கணக்கெடுப்பை இதுவரை துவங்காததற்கு என்ன காரணம் என்று கேட்டால் கொரோனா பரவலை கை காட்டுகிறார் அமித்ஷா. கொரோனா பரவல் முடிந்து விட்டது என்று ஒன்றிய அரசே ஒப்புக்கொண்ட பிறகு மக்கள்தொகை கணக்கெடுப்பை துவங்க மறுப்பது ஏன் ? என்ற கேள்விக்கு அவரிடம் பதில் இல்லை. வழக்கம்போல விரைவில் துவங்கும் என்ற வழக்கமான பல்லவியையே பாடியுள்ளார் உள்துறை அமைச்சர்.

மக்கள் தொகை கணக்கு எடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பும் சேர்த்து நடத்தப்படுமா என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு கணக்கெடுப்பு பணி துவங்கும்போது தெரியும் என்று மழுப்பியுள்ளார் அமைச்சர்.

மணிப்பூரில் ஓராண்டுக்கும் மேலாக வன்செயல்கள் நடந்து வருகின்றன. கடந்த மாதம் கூட பெரும் வன்முறை வெடித்தது. ஆனால் கடந்த மூன்று நாட்கள் எந்த வன்முறையும் நிகழவில்லை என்பதையே சாதனையாகக் கூறுகிறார் அமித்ஷா. இதுவரை பிரதமர் மணிபபூர் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை. யாருடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படவில்லை. ஆனால் மூன்று நாட்கள் வன்முறை இல்லை என்பதையே தங்களுடைய மூன்றாவது முறை ஆட்சியின் பெரும் சாதனையாக பீற்றிக் கொள்கிறார் அமித்ஷா.

ஆனால் தங்களது ஆட்சி காலம் முடிவதற்குள் ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டத்தை நடைமுறைப்படுத்தியே தீருவோம் என்றும், வக்பு வாரிய சட்டத் திருத்தத்தை விரைவில் நிறைவேற்றுவோம் என்று கூறுகிறார் அமித்ஷா. இந்த திட்டங்கள் ஒன்றிய அரசின் மதப் பகைமை அடிப்படையில் கொண்டு வரப்படுபவை. இதற்கு காட்டும் அவசரத்தை சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதில் ஏன் அவசரம் காட்ட மறுக்கிறது ஒன்றிய அரசு.

முதல் முறை ஆட்சிக்கு வந்தபோது 100 நாட்களுக்குள் சுவிஸ் வங்கியில் இந்திய அரசியல்வாதிகள், பெரும் பண முதலைகள், தனி நபர்கள் போட்டு வைத்துள்ள கணக்கில் காட்டப்படாத பணத்தை எடுத்து இந்திய மக்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.15 லட்சம் தருவதாக கூறினார். ஆண்டுக்கு 2 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தி தரப்படும் என்று திறம்பட உரைத்தார். ஆனால் இன்று பல கோடி இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கான கதவுகளை அடைத்து நாட்டையே தனியார்மயத்திடம் விற்று விடுவதில் முனைப்பாக இருக்கிறார். அதுமட்டுமல்ல வேளாண் விளைபொருள்களுக்கு உற்பத்தி செலவைவிட ஒன்றரை மடங்கு கூடுதல் விலை தருவோம் என்றார். ஆனால் இப்போதும் கூட குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்தி உள்ளோம் என அடக்கி வாசிக்கிறார் அமித்ஷா.

மொத்தத்தில் ஆட்சிக்கு வந்தபோது வாக்குறுதிகளை இதுவரை நிறைவேற்றவில்லை. செய்ய வேண்டியவற்றை செய்யாமலும், செய்யக்கூடாததை செய்தும் நாட்களை கடத்தி வருகிறது ஒன்றிய அரசு. மூன்றாவது தவணையின் நூறாவது நாளில் கசப்பையும், கார்ப்பரேட் கூட்டாளிகளுக்கு இனிப்பையும் தருவதாகவே இருக்கிறது.

அதேபோல் தான் பழைய ஓய்வூதியம் அமல்படுத்தப்படும், சரண்டர், வரையறுக்கப்பட்ட ஊதியம், காலிப்பணியிடங்கள் நிரப்புதல்,

சாலைப்பணியாளர்களின் 41 மாத காலம் பணிக்காலமாக அறிவிக்கப்படும் உள்ளிட்ட கோரிக்கைகள் நிச்சயம் நிறைவேற்றப்படும் என்ற முதல்வரின் வாக்குறுதிகளும் இது நாள் வரை நிறைவேற்றப்படவில்லை. இனிமேலுமாவது நிறைவேறுமா என்ற நம்பிக்கையும் பொய்த்துப்போயிற்று. நாற்பது வருடங்களை கண்டிருக்கிற இந்த இயக்கம் கடந்த இருபது வருடங்களாக பழைய ஓய்வூதியத் திட்டத்தை திரும்ப கொண்டு வருவதற்கான போராட்டத்தை தொடர்ந்து நடத்தி கொண்டிருக்கிறது. எந்த அரசியல் கட்சிகளும் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை ஒரு பொருட்டாக கருதுவதில்லை என்பதைத்தான் அரசாங்கத்தின் நடவடிக்கையிலிருந்து உணர முடிகிறது. இது தங்களின் நியாயமான உரிமைகளுக்காக போராடும் ஒவ்வொரு இயக்கத்தின் தன்மானத்தை உரசி பார்க்கும் செயலாகும். கிட்டத்தட்ட இது நம்பிக்கைத் துரோகம். இதனால் தீவிரமானதொரு கிளர்ச்சிக்கு ஊழியர்களை உந்தித் தள்ளி கொண்டிருக்கிறது என்பதை உணர்த்தும் நேரம் வந்துவிட்டது.

எத்தகைய இடர்பாடுகள் வந்தாலும் அரசு ஊழியர்கள் தாங்கள் முன் வைத்த காலை உரிமைகளை வென்றெடுக்கும் வரை பின்வாங்க மாட்டார்கள் என்பதை அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் நிரூபித்துக் காட்ட வேண்டிய நாள் நெருங்கி வருகிறது. புதிய உரிமைகளை போராடிப் பெறுவதற்கு உருவாக்கப்பட்ட இயக்கம், இன்றைய சூழலில் இருக்கிற உரிமைகளை தக்க வைத்துக்கொள்ளவே கடுமையாக நின்று போராட வேண்டியிருக்கிறது.

பழைய ஓய்வூதியத் திட்டத்தை திரும்ப பெறுவதற்கு தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருக்கிறோம். ஊதிய முரண்பாட்டை தீர்க்க வேண்டுமென்ற கோரிக்கை ஒரு தலைமுறையாக நிலுவையில் வைக்கப்பட்டிருக்கிறது. காலிப் பணியிடம் நிரப்பிட வேண்டும் என்ற கோரிக்கை முற்றாக நிராகரிக்கப்பட்டு (தற்பொழுது அவுட் சோர்சிங், ஒப்பந்தமுறையில் ஆட்கள் தேர்வு) இன்று ஆறு லட்சம் ஊழியர்களின் பணிகளை இப்போது பணியில் உள்ள அரசு ஊழியர்களாகிய நாம் முதுகெலும்பு உடைய பணி செய்து கொண்டு இருக்கிறோம். அதனால் பல்வேறு நோய்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளோம். ஆறு லட்சம் தமிழக இளைஞர்களின் எதிர்காலமும், வாழ்வாதாரமும் இதன் மூலம் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது என்று சமூக நீதி கோட்பாட்டையும் அரசிடம் முன் வைத்து போராடுகிறோம். ஆனால் எந்த அரசாங்கமாக இருந்தாலும் சமூக நீதியைப்பற்றி தமிழக இளைஞர்களின் எதிர்காலம் பற்றி அக்கறை கொள்வதாக இல்லை.

அதற்கு மாறாக அனைத்து துறைகளிலும் அவுட்சோர்சிங் செய்வதற்கு அரசு ஆணைகளை வெளியிட்டு, இட ஒதுக்கீடு கொள்கையை இழுத்து மூடவும், அரசுத்துறைகளை தனியார் மயமாக்கும் நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளவும்தான் முனைந்துள்ளன. தேர்தல் வாக்குறுதி என்ற பொய் அறிக்கை மூலம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் போன்ற அனைத்து தரப்பு உழைக்கும் மக்களின் அவர்தம் குடும்பத்தாரின் ஓட்டுக்களை பெற நம்பிக்கை துரோகங்களை செய்து வருகின்ற அரசியல் தலைவர்களை நாம் பார்த்து வருகிறோம். அரசு ஊழியர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நியாயமான கோரிக்கைகளில் ஒன்றைக்கூட இந்த அரசு நிறைவேற்றாதது அரசு ஊழியர், ஆசிரியர்கள் என அரசு ஊதியம் பெறும் அனைவரையும் ஏமாற்றத்தில் ஆழ்த்தியுள்ளது.

வாக்களித்தபடி புதிய ஓய்வூதிய திட்டத்தை திரும்ப பெறுவது உறுதி அளித்தபடி சத்துணவு ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், எம்ஆர்பி செவிலியர்கள், ஊர் புற நூலகர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்காதது, சிறப்பு காலம் முறை ஊதியம் பெறுபவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் நிர்ணயிக்காதது, சாலை பணியாளரை 41 மாத பணி நீக்க காலத்தை பணி வரன் முறை செய்து 41 மாத ஊதிய இழப்பை வழங்கிட வைக்கப்பட்ட கோரிக்கை பரிசிலிக்கப்படாமல் இருப்பது, முடக்கப்பட்ட சரண்டர் விடுப்பு நிறுத்தி வைத்துள்ளது, 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகை இதுவரை வழங்காமல் உள்ளது, அனைத்து துறைகளிலும் அவுட்சோர்சிங் முறை மற்றும் ஆட்குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது, தமிழக அரசு துறைளில் காலியாக உள்ள 6 லட்சம் பணியிடங்கள் நீண்ட

நாட்கள் நிரப்பிடாதது, புதிய மருத்துவ காப்பீடு திட்டத்தை அரசு ஏற்று நடத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கை தீர்க்கப்படாமல் இருப்பது அரசு ஊழியர், ஆசிரியர் மத்தியில் கொந்தளிப்பையும் இளைஞர் மத்தியில் நம்பிக்கை இன்மையும் விரக்தியும் ஏற்படுத்தி உள்ளது

சமூக நீதிக்காக போராடிய திராவிட அரசாங்கங்கள் தான் இன்று சொந்த நாட்டில் இளைஞர்களை கையேந்தும் நிலைக்கு ஆளாக்கி உள்ளனர். நமது மாநிலத்தில் வருடம் தோறும் மூன்று லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று தேர்தல் வாக்குறுதி காற்றில் கரைந்து காணாமல் போனது தான் திராவிட மாடல் அரசாங்கத்தின் சாதனையாக உள்ளது. அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் இன்றைய இக்கட்டான நிலைக்கு முக்கிய காரணம்.

(கடந்த அரசு சர்வாதிகார தர்பாரில் இருந்து தமிழகம் விடுபட்டு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மற்றும் ஒட்டுமொத்த உழைப்பாளி மக்கள் சுதந்திர காற்றை சுவாசிப்பதற்கான உணர்வை உருவாக்கும் திமுக அரசு.என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் எதிர்பார்த்தது)

அதன் அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு. க. ஸ்டாலின் அவர்கள் கொடுத்த நம்பிக்கைகளும் வாக்குறுதிகளும் தான் அவர் அரசு ஊழியர்கள் நடத்திய போராட்டங்களுக்கு சென்று அப்போதைய ஆளும் கட்சியிடம் அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றக் கூறி முதல் குரல் கொடுத்தவர். கொடுத்ததோடு மட்டும் அல்லாமல் ஆசிரியர்கள், அரசு ஊழியர்களின் அனைத்து கோரிக்கைகளையும் திமுக அரசு ஆட்சிக்கு வந்ததும் தீர்த்து வைப்பேன் என்று உறுதிமொழியையும் தந்தார். அவர் சொன்னபடி அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தங்கள் குடும்பத்தினருடன் வாக்களித்ததோடு மட்டுமல்லாமல் பிரச்சாரங்களும் செய்து திரு மு. க. ஸ்டாலின் அவர்கள் முதல்வராக அமர முக்கிய பங்காற்றினோம். ஆனால் முதல்வராகி 4 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் அவர் தேர்தலிலும் அதற்கு முன்பும் கொடுத்த வாக்குறுதிபடி அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை ஒன்றைக் கூட செயல்படுத்தாமல் இருப்பதோடு அரசாங்கத்தை நேர் எதிர் திசையில் இயக்கஆரம்பித்துள்ளார்.

அவுட்சோர் சிங் அரசாணைகளை வெளியிட்டு ஒட்டுமொத்த அரசாங்கத்தையும் தனியார் மயமாக்கும் முடிவை ஒரு திராவிட மாடல் அரசு முன்னெடுத்துள்ளதை ஊடக விமர்சனங்கள் முதற்கொண்டு கூட்டணி கட்சித் தலைவர்கள் வரை ஆச்சரியம் கலந்த அதிர்ச்சியோடு பார்க்கிறார்கள் இதன் மூலம் ஆட்சியாளர்கள் (எந்த கட்சியாக இருந்தாலும்) அவர்கள் ஆசிரியர்கள், அரசு ஊழியர்களுக்கான உரிமைகளை சட்டப்படியான உரிமைகளை கொடுப்பதற்கு மனமற்றவர்களாக உள்ளார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் அவரது குடும்பத்தினர் என அனைத்து அரசு ஊதியம் பெறக்கூடிய குடும்பத்தினர் ஓட்டுக்களை பெறுவதற்காக எந்த நிலைக்கும் இறங்கி வந்து பொய்யான வாக்குறுதிகளை சொல்வார்கள் என்பது மீண்டும் மீண்டும் உணர்த்தப்பட்டுள்ளது. இதுதான் இந்த அரசாங்கத்தின் நிலை என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டு வரும் நிலையில் அரசு ஊழியர்கள் தங்கள் போராட்டங்களை அடுத்த நிலைக்கு கொண்டு செல்ல வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள்

இந்த 40 ஆண்டு காலத்தில் அரசாங்கங்களின் நடவடிக்கைகளும் அதை அரசு ஊழியர்கள் எதிர்கொண்டு போராடி வெற்றி பெற்ற விதங்களும் அவருடைய நாளைய போராட்டங்களுக்கான விதைகள் ஆகும். ஊழியர்கள் மத்தியில் தொய்வையும் சோர்வையும் சலிப்பையும் ஏற்படுத்துவதன் மூலம் போராட்டங்களை நீர்த்துப் போகச் செய்யலாம் என்ற அரசாங்கத்தின் போக்கை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உடைத்தெரிய வேண்டிய மனநிலைக்கு வந்திருக்கிறார்கள்

அதிகாரம், பொய்யான வாக்குறுதிகள், அரசாணைகள், அவசர சட்டங்கள் போன்றவற்றின் மூலம் அரசு ஊழியர், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் போன்றவர்களின் சட்டப்படியான உரிமைகளை பறிக்க

நினைக்கும் அரசாங்கம், நிறுவனம் மற்றும் அமைப்புகளிடமிருந்து உரிமைகளை மீட்டுப் பெறுவதில் சுணக்கமோ நம்பிக்கை இன்மையோ ஏற்பட்டு விடாமல் போராட்டத்தை வெற்றிகரமாக மாற்றிட ஒரு முழுமையான கருத்து ஒற்றுமை இந்த நேரத்தில் மேற்கொள்ள வேண்டி உள்ளது. போராட்டங்களை களத்திற்கு ஏற்ப மாற்றி அமைத்து எவ்வளவு நாள் போராடினாலும் எதுவும் செய்ய முடியாது என்று முரண்டு பிடிக்கும் அரசாங்கத்தை நம்முடன் வந்து பேச்சுவார்த்தை நடத்தியே ஆகவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்துவது அல்ல நிர்பந்தத்தை நாம் உருவாக்கிட வேண்டும்.

ஒவ்வொரு இயக்கமும் ஒவ்வொரு போராட்டமும் இருப்பை நிலை நிறுத்துவது மட்டுமல்ல அது ஒவ்வொரு அரசு ஊழியரிடமும் உரிமைக்கான நெருப்பை பற்ற வைப்பது அரசு ஊழியர்கள் அனைவரும் அவர்களுடைய விதியை மாற்றி எழுதுவதற்கான சக்தியை பெற்றிருக்கிறார்கள் அந்த சக்தி பெரும் நெருப்பாக தீச்சுவாலையாக கொழுந்து விட்டு எரியும்போது நம்முடைய கொந்தளிப்பின் உணர்ச்சியை ஆட்சியாளர்கள் உணர்வார்கள். எவ்வளவு நெருக்கடியான காலகட்டத்திலும் அரசிற்கு உறுதுணையாக நின்று இருக்கிறார்கள் அரசு ஊழியர்கள் என்று வரலாற்றை அவர்கள் புரிந்து கொள்வார்கள். அதை அவர்களுக்கு அகிம்சையால் புரிய வைக்க முயன்று முடியாமல் போய் விட்டதால் அந்த அகிம்சைக்கு சற்றும் குறையாத வலிமையான போராட்டங்களை நோக்கி பயணத்தை அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தொடங்க இருக்கிறார்கள்.

சிவில் சமூகத்தை கைப்பற்றும் அரசியல்வாதிகளுடைய அஜெண்டா தங்கு தடை இன்றி முன்னோக்கிச் செல்கிறது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, நம்பிக்கை துரோகங்களை தாங்கிக் கொண்டு முன்னேறும் போர் வீரனை போல் இன்றைய காலகட்டத்துக்கான ஒரு போராட்ட வடிவத்தையும் முழக்கங்களையும் உருவாக்கிட வேண்டிய அவசர அவசியம் அரசு ஊழியர்களுக்கு எழுந்துள்ளது. அரசியல்வாதிகள் தங்கள் கட்சிக் கோட்பாட்டில் சற்றும் பின்வாங்காதபோது சட்டமன்றத் தேர்தல் உள்ளாட்சித் தேர்தல் வரும் சூழ்நிலையில் அரசு ஊழியர்களின் கோரிக்கை என்ன என்பதை ஆட்சியாளர்கள் உணர இப்போதே உக்கிரமானதொரு போராட்டத்திற்கு அரசு ஊழியர்கள் ஆயத்தமாகி வருகிறார்கள்.

பிறப்புக்கு பின்னும் இறப்புக்கு முன்னும் இங்கே மாறாதது என்றும் எதுவும் இல்லை அரசு ஊழியர்கள் தாங்கள் விரும்பக்கூடிய மகிழ்ச்சியை மற்றவர்களுக்கும் தேடித் தரும் துடிப்பில் உள்ளனர். அரசு ஊழியர் வர்க்கம் நிகழ்கால சமூகத்தையும் தாண்டி ஒரு வருங்கால சமூகத்தை படைக்க கூடிய வர்க்கம் என்பதை நம்மை மறுப்போருக்கும் மீண்டும் ஒருமுறை நிரூபித்துக் காட்டும் துடிப்பில் உள்ளது.

எனவே தமிழக அரசு நம்பிக்கை வாக்குறுதி கொடுத்து ஆட்சிக்கு வந்த ஒரு அரசு கொடுத்த வாக்குறுதிகளை ஒரு சிலவற்றை கூட நிறைவேற்றிட மறுக்குமானால் அதற்கான விலையை அது கொடுத்தே தீர வேண்டும் என்பதை 2024.டிசம்பர் 13 14 ஆம் தேதி தூத்துக்குடியில் நடைபெறும் நமது சங்கத்தின் 15 ஆம் மாநில மாநாடு முடிவு செய்யும். திமுக அரசின் முதல்வர் தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால் நம்முடைய வாழ்வாதார கோரிக்கையை நிறைவேற்ற கூர் தீட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. மக்கள் நலன் என்றால் என்ன? அரசு ஊழியர்கள் என்றால் யார்? கொடுத்து வாக்குறுதி நிறைவேற்றாவிட்டால் அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை எல்லாம் முதல்வருக்கு உணர்த்த இப்போதே நாம் போர்க் குணமிக்க போராட்டங்களை வடிவமைப்போம் ஒன்றிய அரசனாலும் சரி மாநில அரசானாலும் சரி எந்த அரசாங்கமும் உரிமைகளை பறிக்க முயன்றால்அந்த அரசாங்கத்தை எதிர்த்து போராடுவதே உண்மையான ஜனநாயகம் ஆகும்.

அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் அதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல என்பதை நம்முடைய போர்க்குணமிக்க போராட்டங்களும் வலிமையான இயக்கங்களும் அரசுக்கு எடுத்துக்காட்டடும். அந்த உணர்வோடு நமது மாநில மாநாட்டில் கலந்து கொண்டு மாநாடு எடுக்கும் போராட்ட அறைகூவலை. பேரலையாக மாற்றுவோம். போராட்டங்களால் மறுக்கப்பட்ட உரிமைகளை மீட்டெடுப்போம் வாருங்கள் தோழர்களே! ●

கட்டுரை

# செப்டம்பர் 20: சிந்துவெளி நாள்

**ச.தமிழ்ச்செல்வன்**

சிந்துவெளி நாகரிகம் கண்டெடுக்கப்பட்டதை தொல்லியல் அறிஞர் ஜான் மார்ஷல் உலகுக்கு அறிவித்த நூற்றாண்டு இன்று தொடங்குகிறது.

1924 செப்டம்பர் 20 இந்திய வரலாற்றில் மறக்க முடியாத நாள். அது வழக்கமான தொல்லியல் முடிவுகளை அறிவித்த ஓர் நாளாக இருக்கவில்லை. அதுகாறும் இந்தியப்பண்பாட்டின் தோற்றுவாய் மற்றும் தொடர்ச்சி பற்றி நிலவி வந்த அத்தனை கருத்துகள், நம்பிக்கைகள், கற்பிதங்கள் அத்தனையையும் ஒரே நாளில் அந்த அறிவிப்பு தலைகீழாய் மாற்றிப் போட்டது.

பீகாரில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பண்டைய நகரமான ராஜ்கீரில் கிடைத்த கோட்டைச்சுவரும் செங்கற்களும்தான் இந்தியாவின் வரலாற்றுக்காலத்தின் முதல் கட்டுமானம் என்கிற கருத்தே இந்திய வரலாற்றை எழுதியவர்களின் நம்பிக்கையாக இருந்து வந்தது.

ஆனால் மொகஞ்சோதரா, ஹரப்பா நகரங்களில் தொடங்கி தெற்கே ராஜஸ்தான், குஜராத் எனப் பரவி மகராஷ்ட்ராவின் தைமாபாத் வரை தோண்டத்தோண்ட சிந்துவெளி நாகரிகத்தின் நகரங்கள் பூமிக்குள்ளிருந்து எழுந்து வந்துகொண்டே இருந்தன. அங்கே கிடைத்த செங்கற்களும் திட்டமிட்ட தெருக்களும் பொதுக்குளியலிடம், தானியக்கிடங்கு, நிர்வாக அலுவலகங்கள், இரு அறைகள் கொண்ட வீடுகள் போன்ற கட்டமைப்புகள் உலகை வியப்பில் ஆழ்த்தின.

“ஆதி இந்தியர்கள்” என்கிற தன் புகழ்பெற்ற நூலில் இதுபற்றி டோனி ஜோசப் குறிப்பிடுவது:. “எல்லாவற்றையும் விட ஹரப்பா நாகரிகத்தின் மிகச்சிறப்பான அம்சம் அதன் பிரம்மாண்டம்தான். அந்த நாகரிகம் உச்சத்தில் இருந்தபோது அது சுமார் பத்து லட்சம் சதுர கிலோ மீட்டர் பகுதியை உள்ளடக்கிய ஒன்றாக இருந்தது. மெசப்பட்டோமிய நாகரிகத்தையும் எகிப்திய நாகரிகத்தையும் ஒன்றாகச் சேர்த்தால்கூட அந்த அளவு வராது. அதோடு அக்காலகட்டத்தில் இருந்த எந்தவொரு நாகரிகத்தையும் விட அது அதிக அளவு மக்கட்தொகையைக் கொண்டிருந்தது.”

இன்றைய இந்தியாவின் மொத்த நிலப்பரப்பு சுமார் முப்பது லட்சம் சதுர கிலோமீட்டர்கள். சிந்துவெளி நாகரிகம் அதில் மூன்றில் ஒரு பங்கு இருந்துள்ளது.

சிந்துவெளி நாகரிகத்தின் இன்னொரு மிக முக்கியமான அம்சம் அது வேதகாலத்துக்கு முற்பட்டது என்கிற உண்மையாகும். கி.மு.2600 முதல் கி.மு.1900 வரை நிலைத்திருந்த நாகரிகம் அது..வேத காலம் எனப்படுவது கி.மு.1500 க்கும் கி.மு.500க்கும் இடைப்பட்ட பிற்காலத்தைச் சேர்ந்ததே. ஒட்டுமொத்த இந்திய வரலாற்றையும் வேத காலத்திலிருந்து மட்டுமே துவக்கிப் பேசிக்கொண்டிருந்த கற்பிதமெல்லாம் 1924 செப்டம்பர் 20க்குப் பிறகு மலையேறிவிட்டது. ஜான் மார்ஷல் அறிவித்தபோதே இது வேதகாலத்துக்கு முற்பட்ட நாகரிகம் என்று அறிவித்தார். ஹரப்பா நாகரிகத்தின் எந்த அடையாளமோ அதுபற்றிய பதிவோ மீள் நினைவோ ரிக் வேதத்தில் ஓரிடத்தில்கூட இல்லை. ஆரிய நாகரிகத்தின் முக்கிய அடையாளங்களான

குதிரையும் ஆரக்கால் பொருத்திய சக்கரங்களும் சிந்துவெளி நாகரிக நிலப்பரப்பில் எங்கும் கிடைக்கவில்லை. ஆரியர் வருகைக்கு 500 ஆண்டுகளுக்கு முன்பே சிந்துவெளி நாகரிகம் அழிந்துவிட்டிருந்தது. அதன் மிச்சசொச்சம் எதுவும் ஆரியர் மொழியில் இருக்கவில்லை. அது வேறு ஓர் உலகமாக இருந்தது.

1924 காலகட்டத்திலேயே வங்காளத்தைச் சேர்ந்த அகழாய்வு அறிஞர் சுனிதிகுமார் சட்டர்ஜி சிந்துவெளி நாகரிகம் ஆரிய நாகரிகத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு திராவிட மக்களின் நாகரிகமாகத்தான் இருக்க முடியும் என்று எழுதினார். ஆனாலும் சிந்துவெளியில் கிடைத்த எழுத்துக்களை இதுவரை யாராலும் வாசிக்க முடியாததால் அறுதியிட்டுக் கூற முடியவில்லை. ஆனாலும் சிந்து வெளி எழுத்துக்களை வாசிக்கும் ஆய்வில் தன் வழ்நாளின் 40 ஆண்டுகளைச் செலவிட்ட ஆய்வறிஞர் ஐராவதம் மகாதேஎவன், மொழியியலறிஞர் அஸ்கா பர்போலா உள்ளிட்ட பல அறிஞர்களும் சிந்துவெளி எழுத்துக்கள் சந்தேகத்துக்கிடமின்றி ஒரு தொல் திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்ததாகத்தான் இருக்க முடியும் என்று நிறுவியுள்ளார்கள். சிந்து வெளி எழுத்துக்களுக்கும் தமிழ் பிராமி எழுத்துக்களுக்கும், கீழடியில் மண்பாண்டங்களிலும் மயிலாடுதுறை அருகில் செம்பியன் கண்டியூரில் கிடைத்த கற்கோடரியிலும் இருக்கும் எழுத்துக்கள் அச்சு அசலாக சிந்துவெளி எழுத்துக்களோடு பொருந்திப்போவதை ஒரு பாமரரும்கூட அடையாளம் காண்பார்.

சிந்துவெளி நாகரிகம், வேதகாலத்துக்கு முற்பட்டது, ஆரியருக்கும் இதற்கும் தொடர்பே இல்லை என்கிற கண்டுபிடிப்புகள் சங் பரிவாரங்களின் வரலாற்றுப் புளுகுகளை ஆட்டம் காணச் செய்துள்ளன. மூலத்தில் மிளகாய் அரைத்து வைத்ததுபோல சங்கிகள் எப்படி இந்த உண்மைகளை அழிப்பது அல்லது மறைப்பது அல்லது திரிப்பது என்று வெறிகொண்டு அலைகிறார்கள். வேதகாலமும் ஹரப்பா நாகரிக காலமும் ஒன்று என்று ஓங்கி அடித்து விடுகிறார்கள். அதற்காக நிலத்தில் இல்லாமல் வேதத்தில் ஓடுவதாகச் சொல்லப்பட்ட ‘சரஸ்வதி’ என்கிற ஒரு நதியை துருப்புச்சீட்டாக இறக்கியுள்ளார்கள். சரஸ்வதி நதிக்கரையில்தான் ஹரப்பா நாகரிகம் தோன்றியது என்பதற்கான ஆதாரங்களை உருவாக்கித் தருபவருக்கு ஆயிரம் பொன் பரிசு என்று அறிவிப்பது போல ‘இல்லாத சரஸ்வதி நதி’யியைக் கண்டுபிடித்து கூகுள் மேப்பில் இணைக்கப் பல ஆயிரம் கோடிகளைச் செலவழித்துள்ளார்கள். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே இருந்ததாக அவர்கள் சொல்லும் ‘ராமர் பாலத்தை’ நாசா விண்வெளி ஆய்வுப்புகைப்படமாக வெளியிட்டார்களே அதே பிராடு டெக்னிக்கைத்தான் சரஸ்வதி நதி என்பதற்கும் பயன்படுத்துகிறார்கள்.

ராஜேஷ் கொச்சார் என்கிற ஆய்வாளர் எழுதியுள்ள The Vedhic People என்கிற நூலில் இந்தச் சரஸ்வதி நதி-சரஸ்வதி நாகரிகம் பற்றிய சங்கிகளின் வரலாற்றுத்திரிப்புகளை அடுக்கடுக்கான ஆதாரங்களுடன் அடித்து நொறுக்குகிறார். ஆப்கானிஸ்தானில் இப்போதும் ஓடிக்கொண்டிருக்கும் ஹரக்ஸ்வதி என்கிற நதியைத்தாண்டித்தான் ஆரியர்கள் இந்தியாவுக்குள் வந்தனர். அந்த நதியினின் மீள்நினைவுகளையே வேதத்தில் பதிவு செய்தனர். அந்தக் கக்கர் ஹக்ரா என்கிற ஹரக்ஸ்வதியைத் தான் சரஸ்வதி என்று இன்றைய சங்கிகள் திரித்துக் கதை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை ராஜேஷ் கொச்சார் விளக்குகிறார்.

தெற்கே ராமர் பாலம், அயோத்தியில் பாபர் மசூதிக்கு அடியில் ராமர் கோவில், மதுராவில் ஞான வாபி மசூதிக்கு அடியில் தோண்டினால் கிடைக்கும் கிருஷ்ணர் ஜன்மக்கோவில், வாரணாசியில் ஷாயி ஈத்கா மசூதிக்கு அடியில் விஸ்வநாதர் கோவில் என்று சங்கிகள் பச்சைப்பொய்களை வரலாறு என்று அடுத்தடுத்து முன் வைத்துப் பரப்பிக்கொண்டே இருப்பதைப் பார்க்கிறோம். வாக்குகளுக்காக மட்டும்

அவர்கள் இதைச் செய்யவில்லை. ஒரு கற்பிதமான புதிய வரலாற்றுணர்வை மக்கள் மனங்களில் கட்டமைக்கிறார்கள். 40களில் யூத இனவெறியர்கள் எப்படி பாலஸ்தீனத்துக்குள் ஒரு புதிய யூத நாட்டைக் கற்பனையில் கட்டமைத்து யூத மக்களின் மனங்களில் விதைத்தார்களோ அதே பாணியில் சங்கிகள் செய்து வருகிறார்கள். இவர்களிடமிருந்து வரலாற்றையும் வாழ்வையும் காக்கும் போராட்டத்தை நாம் நடத்திக்கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது. வலதுசாரிச் சாய்மானம் கொண்ட வரலாற்றாசிரியர்கள், தொல்லியல் ஆய்வாளர்கள் சிலரும் இவர்களுக்குத் துணை போவது அவமானம். இது ஏதோ கல்விப்புலம், வரலாற்றுப்புலம் சார்ந்த பிரச்னை அல்ல. இந்தியா நாளை ஒரு பாலஸ்தீனமாக ஆகாமல் இருக்க நாம் நடத்த வேண்டிய மாபெரும் பண்பாட்டு அரசியல் போராகும்.

எந்த ஆதாரமும் இல்லாவிட்டாலும், பாஜக ஆட்சியாளர்கள் சிந்து வெளி நாகரிகத்தை சிந்து-சரஸ்வதி நாகரிகம் என்று பேசி வருவதுடன் மத்திய அரசின் பள்ளிப் பாடப்புத்தகங்களிலும் அப்படியே எழுதி வைத்திருக்கிறது. இதன் மூலம் இன்னொரு புதிய ஆபத்தைக் கல்விப்புலத்தில் சங்கிகள் கொண்டு வந்து சேர்த்துள்ளார்கள். பிஞ்சு மனங்களில் பொய் வரலாற்றைப் பதிக்கிறார்கள்.

ஆர்.பாலகிருஷ்ணன் அவர்களின் 30 ஆண்டுகால ஆய்வின் அடிப்படையில் அவர் வெளியிட்டுள்ள “ஒரு பண்பாட்டின் பயணம்-சிந்து முதல் வைகை வரை” என்கிற பெருநூல் சங்கிகளின் கற்பிதங்கள் மீதான் இன்னொரு வலுவான தாக்குதலாகும். அவர் தமிழர் தொன்மையின் மீது படிந்துள்ள புதிரையும் சிந்துவெளிப்புதிரையும் விடுவிக்க வேறொரு புதிய கோணத்தில் ஆய்வு மேற்கொண்டார். சிந்துவெளியின் மொழி என்ன மொழி என்கிற ஆராய்ச்சிக்குள் போகாமல், சிந்துவெளி நாகரிகத்தின் உடல்மொழியின் இணைகள் அல்லது தொடர்ச்சி இந்திய நிலப்பரப்பில் எங்கெல்லாம் கிடைக்கிறது என்கிற கேள்வியுடன் களம் இறங்கினார். அதாவது சிந்துவெளிப்பண்பாட்டின் பொருள்சார் பண்பாட்டுக்கூறுகள் எங்கெல்லாம் தொடர்கின்றன? அந்நாகரிகத்தின் மீள்நினைவுகள் இந்தியப்பரப்பெங்கும் புழக்கத்தில் உள்ள இலக்கியங்களில் எதிலெல்லாம் பதிவாகியிருக்கின்றன என்று ஆராய்ந்தார்.

இரண்டு முக்கியமான வழிகளை அவர் கண்டார். ஒன்று ஊர்ப்பெயர் ஆய்வு. சிந்துவெளி நிலப்பரப்பு முழுவதும் இன்றும் வழங்கும் ஊர்ப்பெயர்கள் சிலிர்பூட்டும் விதத்தில் தமிழ்ப்பெயர்களாக இருக்கின்றன என்கிற உண்மையைக்கண்டு பிடித்தார். கொற்கை-வஞ்சி-தொண்டி வளாகம் என்று அதற்குப்பெயரிட்டார். ஆம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வடமேற்கு இந்தியா உள்ளிட்ட ஹரப்பா நாகரிகத்தின் நிலப்பரப்புகளில் கொற்கை, வஞ்சி, தொண்டி, மதுர, கல்லூர், கண்ணகி என ஊர்ப்பெயர்கள் இன்றும் உள்ளன. பாகிஸ்தானில்: கண்யகி, கோவலன், வஞ்சி என்றும் ஆப்கானிஸ்தானில்: புகார், பும்புகார் என்றும் ஊர்ப்பெயர்கள் இருக்கின்றன. அங்கிருந்து சிந்துவெளி நாகரிகம் சிதைந்த பிறகு புலம் பெயர்ந்து தெற்கே நகர்ந்த மக்கள் தங்கள் பழைய ஊர்ப்பெயர்களை - பிடிமண் எடுத்துச் செல்வதுபோல எடுத்துக்கொண்டு வந்திருக்க வேண்டும் என்பது ஆர்.பாலகிருஷ்ணன் அவர்களில் முதல் முன்வைப்பு.

காடுகளையும் மலைகளையும் ஊரையும் வீடுகளையும் பொருட்களையும்கூட எடுத்துச் செல்ல முடியாது. மலையின் பெயரையும் ஊரின் பெயரையும் சுமந்து செல்ல முடியும்.

இது தம் தொன்மையை, மரபை, வரலாற்றை எடுத்துச் செல்லும் “உரிமை கோரல்”ஆகும் என்கிறார் ஆர்.பாலகிருஷ்ணன்.

1.செங்கல்தடம் 2.பானைத்தடம் 3.காற்றுத்தடம் 4.சிலம்புத்தடம் 5.விளையாட்டுத்தடம் 6.நகரத்தடம் 7.மீள்

நினைவுத்தடம் 8.வன்னிமரத்தடம் 9.வந்த வழித்தடம் -திராவிட குஜராத், திராவிட மகாராஷ்ட்ரா 10.பெயர்ப்பாலம்- ஏற்கனவே பார்த்தோம் 11.திராவிடச்சிவப்புத்தடம் போன்ற பல பொருள்சார் பண்பாட்டுத்தடங்கள் வழியாக சிந்துவெளிப்பண்பாடு என்கிற ஒரு ஒட்டுமொத்தப் பண்பாடே பயணம் செய்து தெற்கே வந்து நிலைபெற்றிருக்கிறது என்று நிறுவுகிறார்.

ஆர்.பாலகிருஷ்ணன் அவர்களின் இன்னொரு மிக முக்கியமான கண்டுபிடிப்பு இந்தியாவில் சங்க இலக்கியத்தைத்தவிர வேறு எந்த இந்திய மொழி இலக்கியத்திலும் சிந்துவெளி நாகரிகத்தின் மீள் நினைவுகள் பற்றிய பதிவுகளைக் காண முடியவில்லை என்பதாகும். சங்க இலக்கியத்தில் பேசப்படுபவை எல்லாம் அதை எழுதிய மக்கள் தாம் வாழ்ந்த தம் சமகாலவாழ்வைப்பற்றி மட்டும் – வடவேங்கடம் தென்குமரிக்கிடைப்பட்ட நிலப்பரப்பை மட்டும் எழுதியவை அல்ல. வாய்மொழியாகக் காலம் காலமாகக் கடத்தி வந்த மீள் நினைவுகளை சங்க இலக்கியத்தில் பதிவு செய்துள்ளதாக அகச்சான்றுகளையும் இந்திய நிலப்பரப்பெங்கும் விரவிக்கிடக்கும் புறச்சான்றுகளையும் அறிவியல்பூர்வமாக- இயங்கியல்பூர்வமாக- இணைத்து நிறுவுகிறார்.”ஹரப்பா நாகரிகம் விட்ட இடமும் சங்க இலக்கியம் தொட்ட இடமும் ஒன்று: என்பது அவரது புகழ்பெற்ற வாசகமும் கண்டுபிடிப்புமாக அமைகிறது.


சிலருக்கு “திராவிட” என்கிற சொல்லின் மீது ஒவ்வாமை இருக்கிறது.12000 ஆண்டுகால வரலாற்றை திருத்தி எழுத பாஜக அரசு ஆய்வுக்குழுவை அறிவித்தபோது அக்குழுவுக்கான கடமையாக “ஆரிய –திராவிட முரண்பாடு” என்கிற வரலாற்றுப்புனைவை இல்லாமல் செய்வது என்று குறித்தார்கள். திராவிட என்பது ஒரு இனத்தின் பெயரல்ல.1956 இல் பிஷப் கால்டுவெல் மற்றும் எல்லீஸ் துரை போன்ற மொழியியலாளர்கள் முன் வைத்த திராவிட மொழிக்குடும்பம் பற்றியது அது. தமிழ் ஆகிய நம் மொழி திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது. தமிழ், தெலுங்கு, மலையாளம், தெலுங்கு மட்டுமே திராவிட மொழிகள் அல்ல. 25க்கும் மேற்பட்ட திராவிட மொழிகளை கால்டுவெல் பட்டியலிட்டுள்ளார். சிந்துவெளிப்பகுதியில் இன்றும் பிராகுயி என்கிற திராவிட மொழி புழக்கத்தில் இருக்கிறது. தமிழர்களாகிய நாம் ஒரு திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை. இந்தியாவில் ஆரியர் வருகைக்கு முன்னர் ஆப்பிரிக்காவிலிருந்து வந்து குடியேறியவர்கள். ஆரியர்கள் பின்னர் வந்தவர்கள். இதைத்தான் சங்கிகள் அழிக்க நினைக்கிறார்கள், திரிக்க நினைக்கிறார்கள். கடந்த கால வரலாற்றை இழந்தவர்கள் நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் இழப்பார்கள் என்பது காலத்தின் தீர்ப்பு. பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றை எப்படி நாம் இழக்க முடியாதோ அதைப்போலவே மொழிவழி தேசிய இனங்களில் ஒன்றான தமிழ்மொழி பேசும் தேசிய இனமாகிய நாம் நம் கடந்த கால வரலாற்றை இழக்க முடியாது.

இது இனவாதம் அல்ல. வெட்டிப்பெருமிதங்கள் நமக்குத் தேவையில்லை. இல்லாத புகழுரைகள் அவசியமில்லை. அதைத்தான் காலம் காலமாக நாம் செய்து தொலைத்தோம். ஆனால் அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்ட நம் வரலாற்றின் மீது பெருமை கொள்வது பண்பாட்டுப் போர்முனையில் நமக்கு உத்வேகம் அளிக்க உதவும். முற்போக்காளர்கள் இதைக் கையில் எடுத்துச் சரியான திசையில் கொண்டு செல்லாவிட்டால் மதவாதிகளும் மொழிவெறி இனவாதிகளும் தங்கள் கையில் எடுத்துக்கொள்வார்கள்.

ஆகவே சிந்துவெளிப்பண்பாடு உலகுக்கு அறிவிக்கப்பட்ட நூற்றாண்டை முற்போக்காளர்கள் முன்னெடுத்துக் கொண்டாட வேண்டும் என்பது நம் காலத்தின் கட்டளை.

- நன்றி தீக்கதிர் ●

கட்டுரை



# செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியும் (AI) வேலைவாய்ப்பில் வீழ்ச்சியும்...

– மு.பாஸ்கரன்

சர்வதேச தொழிலாளர் அமைப்பு(ILO) செப்டம்பர் 4 ந் தேதி ஜெனீவாவில் கூடிய கூட்டத்திற்கு பிறகு வெளியிட்ட அறிக்கையில் வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தி திறன் ஆகியவை குறித்து மிகப்பெரிய விவாதத்தின் அடிப்படையில் உலகளவில் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு மற்றும் வருமானத்தின் பங்கு சமத்துவதன்மை அதிகரித்து வருவதாகவும் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் கடும் வீழ்ச்சியடைந்து இருப்பதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தியை பொருத்தவரை உலகஅளவில் ஒப்பிட்டு பார்க்கும் போது சராசரி உற்பத்தி இருப்பதாகவும் தொடர்ச்சியாக உற்பத்தி அதிகரித்துள்ளதாகவும் ஆனால், அவை தொழிலாளர்களின் வருமான பங்கை உயர்த்தவில்லையெனவும் 36 நாடுகளில் தொழில்நுட்ப கண்டுபிடிப்பு செயற்கை நுண்ணறிவை(AI) புகுத்தியதே இதற்கான காரணம் என ILO கூறுகிறது. செயற்கை நுண்ணறிவை புகுத்தியதால் பெருமளவில் வேலைவாய்ப்பை தொழிலாளர்கள் இழந்துள்ளனர், ஒரு பகுதியினருக்கு மட்டும் கூடுதல் ஊதியம் கிடைத்து இருக்கின்றது. இதனால் சமத்துவமின்மை காணப்படுகிறது. இந்த வேலைவாய்ப்பு மற்றும் வருமான வீழ்ச்சிக்கு காரணம் AI என சொல்லப்படுகிறது. உலகெங்கிலும் வேலைவாய்ப்பு கிடைப்பது கடினமாக அமைந்துள்ளது ஏன்? இந்தியாவிலும் வேலைவாய்ப்பு சூழல் மோசமாகவுள்ளது என ILO அறிக்கையில் தெரிவித்துள்ளது.

**செயற்கை நுண்ணறிவு (AI) என்றால் என்ன**

மனிதனின் கற்றல், புரிதல், சிக்கல் தீர்க்கும் திறன், முடிவெடுப்பது, படைப்பாற்றல் மற்றும் தன்னாட்சி ஆகியவற்றை உருவகப்படுத்த கணினிகள் (ம) இயந்திரங்களை செயல்படுத்தும் தொழில்நுட்பமே செயற்கை நுண்ணறிவு (AI) ஆகும்.

**செயற்கை நுண்ணறிவு துறைகளில் பயன்பாடுகள்**

சுகாதாரப் பாதுகாப்பில் AI செயற்கை நுண்ணறிவு மனிதர்களின் மேற்பார்வையின்றி நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கும் திறனுடையது. விரைவான நோயறிதலுக்கான தொழில்நுட்பங்களை உருவாக்க முயற்சித்து வருகின்றனர். மேலும் தொழில்நுட்ப அறுவை சிகிச்சைகள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. வணிகத்தில் செயற்கை நுண்ணறிவு நேரத்தையும் முயற்சியையும் கணிசமாக மிச்சப்படுத்தி. உற்பத்தியை அதிகரிக்கிறது.

கல்வியில் மிகவும் திறமையானதாக்க முடியும். மாணவர்களின் தேவைகளை கண்டறிந்து பின்னர் அது அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றிக்கொள்வதோடு செயற்கை நுண்ணறிவு ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கல்வி கற்பித்தல் பணியை மேற்கொள்கின்றன. உற்பத்தியில்

வேலை விகிதத்தை பெரிதும் அதிகரிக்க முடியும். மேலும், முழு உற்பத்தி செயல்முறையும் மனித தலையீடு இல்லாமல் நடைபெறும். அதனால், நிறைய நேரமும் உழைப்பும் மிச்சமாகும். பல தொழிலாளர்களின் வேலையை ஒரே இயந்திரம் மூலம் செய்ய முடியும். அதோடு மட்டுமல்லாமல் பிழைகள் குறைக்கப்படுகின்றன, துல்லியம் அதிகரிக்கப்படுகிறது, துல்லியம் மேலும் துல்லியம் சாத்தியமாகும் என கூறப்படுகிறது. மனிதத் தொழிலாளர்களை விட வேகமாக முடிவுகளை மேற்கொள்கின்றன. ஒருபோதும் ஓய்வெடுக்காது அல்லது தூக்கம் தேவையில்லை.

ஆபத்தான பணிகளில் AI நிலக்கரி சுரங்கம், கடலின் ஆழத்தை ஆராயவும், வெடிகுண்டை செயலிழக்கச் செய்யவும் மற்றும் எரிமலைக்குள் நுழையவும். மனிதர்களுக்கு அப்பாற்பட்ட மிகவும் அபாயகரமானதாக இருக்கும் ஆபத்தான பணிகளைச் செய்ய முடியும். செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியால் செயற்கை நுண்ணறிவு மேலும் பல துறைகளில் பயன்படுத்த சாத்தியமானவை இராணுவம், சட்டம், வீடியோ கேம்கள், அரசு, நிதி, வாகனம், தணிக்கை, கலை, வானிலை முன்னறிவிப்பு முதலிய துறைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். சுருக்கமாகச் சொல்வதானால், செயற்கை நுண்ணறிவு உலகின் எதிர்காலமாகத் தெரிகிறது. வல்லுநர்கள் AI நிச்சயமாக மனித வாழ்வின் ஒரு பகுதியாக மாறும் என்று நம்புகிறார்கள். நமது உலகத்தைப் பார்க்கும் விதத்தை AI முற்றிலும் மாற்றிவிடும். செயற்கை நுண்ணறிவு எதிர்காலம் புதிரானதாகவும் முன்னேற்றத்திற்கு அறிகுறியாக காணப்படுவதும், சந்தேகத்திற்கு இடமின்றி வேலை வாய்ப்பை பாதிக்கும் பாரம்பரிய வேலை பாத்திரங்கள் படிப்படியாக நீக்கப்பட்டு அவற்றை செய்பவர்களின் வேலையின்மைக்கு வழிவகுக்கும், பல வேலை வாய்ப்புகளில் இருந்து தொழிலாளர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகும். ●

# 15 ஆம் மாநில மாநாடு வரவேற்புக்குழு அமைப்புக் கூட்டம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மாநாடு வரவேற்புகுழு அமைப்பு கூட்டம்-தூத்துக்குடி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க சங்கத்தின் 15ஆம் மாநில மாநாட்டினை டிசம்பர் 13,14 2024 தேதிகளில் தூத்துகுடியில் நடத்துவது என்று முடிவுசெய்யபட்டது.

அதன்படி21.09.2024 வரவேற்புக்குழு அமைப்பு கூட்டம் தூத்துக்குடி தோழர் எம் ஆர் அப்பன் இல்லம், தோழர் டி.கே.சுந்தரபாண்டியன் அரங்கத்தில் மாவட்ட தலைவர் தோழர் அ. சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் தோழர் தே.முருகன் அவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

மாநில தலைவர் (பொறுப்பு) தோழர் சா.டானியல் ஜெயசிங் அவர்கள் முறைப்படி கூட்டத்தினை துவக்கிவைத்தார். வரவேற்புக்குழு தலைவராக தோழர்ஞா.ஞானராஜ், செயலாளராக தோழர். தே.முருகன், பொருளாளராக தோழர் அ.சாம் டேனியல் ராஜ் ஆகியோரும் மதிப்புறு தலைவர்களாக சி.ஐ.டி.யு. மாநிலச் செயலாளர் தோழர் ஆர்.ரசல், மூட்டா பொதுச்செயலாளர் தோழர் எம்.நாகராஜன், தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்க மாவட்டத்தலைவர் தோழர் ப.திரவியம் ஆகியோரும் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள். மாநில மாநாட்டு இலச்சினையை மாநில பொதுச்செயலாளர் ஆ.செல்வம் வெளியிட வரவேற்பு குழு தலைவர் ஞா.ஞானராஜ் பெற்றுக்கொண்டார். மாநில துணைத்தலைவர்கள் தோழர் சி.எஸ். கிறிஸ்டோபர், தோழர் மொ.ஞானத்தம்பி, தோழர் கோ.பழனியம்மாள், தோழர் பரமேஸ்வரி, துணைப் பொதுச் செயலாளர்கள் தோழர் என். வெங்கடேசன், தோழர் வெ.சோமசுந்தரம், மாநிலச் செயலாளர்கள் தோழர் சா.கோதண்டபாணி, தோழர்.ஆ.அம்சராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். பொதுச்செயலாளர் தோழர் ஆ.செல்வம் அவர்கள் நிறைவுரையாற்றினார். மாவட்ட பொருளாளர் தோழர் மு.தமிழரசன் அவர்கள் நன்றியுரையாற்றினார். வரவேற்புக்குழு கூட்டத்தில் இருநூறுக்கும் அதிக ஊழியர்கள் கலந்து கொண்டனர். ●

கட்டுரை

# நேரத்தோடு முன்னேறுங்கள்!

**- க.நீதிராஜா**

கோடக் கம்பெனி நினைவிருக்கிறதா? 1997 இல் கோடக் கிட்டத்தட்ட 160,000 பணியாளர்கள் இருந்தனர். மேலும் உலகின் 85% புகைப்படக்கலை கோடக் கேமராக்கள் மூலம் செய்யப்பட்டது. கடந்த சில வருடங்களாக மொபைல் கேமராக்கள் உயர்ந்து வருவதால், கோடக் கேமரா நிறுவனம் சந்தையை விட்டு வெளியே. கோடக் கூட முற்றிலும் திவாலாகி, அவரது ஊழியர்கள் அனைவரும் பணி நீக்கம் செய்யப்பட்டனர். அதே நேரத்தில் இன்னும் பல பிரபல நிறுவனங்கள் தங்களை நிறுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. விருப்பம் HMT (கடிகாரம்), பஜாஜ், டயனோரா (தொலைக்காட்சி), மர்பி (வானொலி), நோகியா (கைபேசி), ராஜ்டூட் (பைக்), தூதர் (கார்), மேலே உள்ள எந்த நிறுவனங்களிலும் மோசமான தரம் இல்லை. இந்த நிறுவனங்கள் ஏன் இன்னும் வெளியே வரவில்லை? ஏனென்றால் அவர்களால் காலப்போக்கில் தங்களை மாற்றிக்கொள்ள முடியாது. அடுத்த 10 ஆண்டுகளில் உலகம் எவ்வளவு மாற முடியும் என்று நீங்கள் நினைக்க மாட்டீர்கள் நிகழ்கால தருணத்தில் நின்று கொண்டிருக்கிறேன்! மேலும் இன்றைய 70%-90% வேலைகள் அடுத்த 10 ஆண்டுகளில் முற்றிலும் முடிந்துவிடும். மெல்ல மெல்ல "நான்காம் தொழில் புரட்சி" யுகத்தில் நுழைகிறோம்.

இன்றைய பிரபல நிறுவனங்களை பாருங்கள்- UBER என்பது மென்பொருள் பெயர். அவர்களிடம் சொந்தமாக கார்கள் இல்லை. இன்னும் இன்று உலகின் மிகப்பெரிய டாக்ஸி-ஃபேர் நிறுவனம் UBER ஆகும். இன்று உலகின் மிகப்பெரிய ஹோட்டல் நிறுவனம் Airbnb ஆகும். ஆனால் வேடிக்கையான விஷயம் என்னவென்றால், அவர்களுக்கு உலகில் ஒரு ஹோட்டல் கூட சொந்தமாக இல்லை. அப்படியே Paytm, Ola Cab, Oyo rooms போன்ற எண்ணற்ற நிறுவனங்களின் உதாரணங்களை சொல்லலாம். அமெரிக்காவில் இன்று புதிய வழக்கறிஞர்களுக்கு வேலை இல்லை, ஏனென்றால் IBM வாட்சன் என்ற சட்ட மென்பொருள் எந்த புதிய வழக்கறிஞரை விட சிறப்பாக வாதாட முடியும். இதனால், அடுத்த 10 ஆண்டுகளில் 90% அமெரிக்கர்களுக்கு வேலை கிடையாது. மீதமுள்ள 10% சேமிக்கப்படும். இவர்கள் 10% நிபுணர்களாக இருப்பார்கள். புதிய மருத்துவரும் வேலைக்கு அமர்ந்திருக்கிறார். வாட்சன் மென்பொருள் புற்றுநோய் மற்றும் பிற நோய்களை மனிதர்களை விட 4 மடங்கு துல்லியமாக கண்டுபிடிக்க கணினி நுண்ணறிவு 2030-க்குள் மனித அறிவை மிஞ்சும். அடுத்த 20 ஆண்டுகளில் இன்றைய 90% கார்கள் சாலைகளில் காணப்படுவதில்லை. மீதமுள்ள கார்கள் மின்சாரம் அல்லது ஹைபிரிட் கார்கள் மூலம் இயங்கும். சாலைகள் மெல்ல மெல்ல காலியாகிவிடும். கேசோலின் நுகர்வு குறைந்து எண்ணெய் உற்பத்தி செய்யும் அரபு நாடுகள் மெல்ல திவாலாகும். உங்களுக்கு கார் வேண்டுமென்றால் ஊபர் போன்ற மென்பொருளில் இருந்து கார் கேட்க வேண்டும். மேலும் நீங்கள் கார் கேட்டவுடனே, முற்றிலும் டிரைவர் இல்லாத கார் வந்து உங்கள் கதவுக்கு முன்னால் நிறுத்தும். ஒரே காரில் பல பேருடன் சென்றால் ஒரு நபருக்கு கார் வாடகை பைக்கை விட குறைவாக இருக்கும்.டிரைவர் இல்லாமல் வாகனம் ஓட்டுவது விபத்துகளின் எண்ணிக்கையை 99% குறையும். இதனால் தான் கார் இன்சூரன்ஸ் நின்றுவிடும் மற்றும் கார் இன்சூரன்ஸ் நிறுவனங்கள் வெளியேறும். பூமியில் வாகனம் ஓட்டுவது போன்ற விஷயங்கள் இனி உயிர் வாழாது. 90% வாகனங்கள் சாலையை விட்டு காணாமல் போகும் போது போக்குவரத்து போலீஸ், பார்க்கிங் ஊழியர்கள் தேவைப்படாது.

சற்று சிந்தித்துப் பாருங்கள், 10 ஆண்டுகளுக்கு முன்பு கூட தெருக்களில் STD பூத் இருந்திருக்கும். நாட்டில் நடமாடும் புரட்சி வந்த பிறகு இந்த STD பூத் எல்லாம் மூட வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. பிழைத்தவர்கள் நடமாடும் ரீசார்ஜ் கடைகளாக மாறிவிட்டார்கள். மொபைல் ரீசார்ஜில் மீண்டும் ஆன்லைன் புரட்சி. வீட்டில் இருந்தபடியே ஆன்லைனில் மொபைலை ரீசார்ஜ் செய்ய ஆரம்பித்த மக்கள். இந்த ரீசார்ஜ் கடைகளை மீண்டும் மாற்ற வேண்டும். இப்போது இவைகள் கடைகளை வாங்குவதற்கும் விற்கவும் பழுதுபார்க்கவும் வெறும் கைப்பேசிகள். ஆனால் இதுவும் மிக விரைவில் மாறும். அமேசான், ஃப்ளிப்கார்ட்டிலிருந்து நேரடியாக மொபைல் போன் விற்பனை அதிகரித்து பணம் என்பதன் வரையறையும் மாறுகிறது. பணம் இருந்திருக்கும் ஆனால் இன்றைய காலகட்டத்தில் அது "பிளாஸ்டிக் பணம்" ஆகிவிட்டது. கிரெடிட் கார்டு மற்றும் டெபிட் கார்டு சுற்று சில நாட்களுக்கு முன்பு இருந்தது. இப்ப அதுவும் மாறி மொபைல் வாலட் யுகம் வருது. வளர்ந்து வரும் பேடிஎம் சந்தை மொபைல் பணத்தின் ஒரு கிளிக் வயதால் மாற முடியாதவர்களை வயது பூமியில் இருந்து விலக்கி விடுகிறது. எனவே காலத்திற்கு ஏற்றவாறு மாறிக்கொண்டே இருங்கள். சிறந்த உள்ளடக்கத்தை உருவாக்குங்கள், நேரத்தோடு முன்னேறுங்கள். ●

# அஞ்சலி



## தோழர் சீத்தாராம் யெச்சூரி

தோழர் சீத்தாராம் யெச்சூரிக்கு செவ்வணக்கம். மாணவர் சங்க தலைவராக இந்திய ஒன்றியம் ஜனநாயகத் தன்மையிலிருந்து மாரி எமர்ஜென்சியை கொண்டு வந்த போது அன்றைய பிரதமரை நேருக்கு நேர் நின்று ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் வேந்தர் பதவியை ராஜினாமா செய்ய வைத்த மாபெரும் மாணவர் சங்கத் தலைவர். ஜே.என்.யூ.வின் இன்றைய தலைமுறை வரை மாணவர்களின் ஜனநாயகத்திற்கு வழிகாட்டியாக இருந்த ஒப்பற்ற தலைவன். சோசலிசம் வீழ்ந்தது என்று உலக நாடுகள் கொக்கரித்த போது சோசலிசம் வீழவில்லை அதை நடைமுறைப்படுத்தியதில் ஏற்பட்ட தவறு என்று மார்க்சியத்தை உயர்த்தி பிடித்து உலக கம்யூனிஸ்டுகளுக்கு மார்க்சியத்தின் வழிகாட்டியாக உயர்ந்த உன்னத தலைவன்.

செப்டம்பர் 13 ஆம் நாள் மறைந்தார் என்பது உலகத்தில் உள்ள ஏழை எளிய மக்களுக்கும் ஜனநாயகம் எண்ணம் கொண்ட மக்களுக்கும் மிகப்பெரிய இழப்பாகும். இந்தியா எப்படி இருக்கின்றது என்பதை தனது கடைசி நாடாளுமன்ற உரையில் தனது வாழ்க்கையும் தனது குடும்பத்தின் வாழ்க்கையையும் பாராளுமன்றத்தில் பதிவு செய்து இந்தியன் இவன் தான் என்று சுட்டிக்காட்டி ஒன்றிய அரசின் மதவெறி மற்றும் சாதிய மேலாண்மைக்கு எதிராக இந்த தேசம் நடை போட வேண்டும் என்று வலியுறுத்திய தத்துவ பேராசான் அருமை தோழர் யெச்சூரி அவர்கள். இந்தியாவில் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களாலும் மதிக்கப்பெற்ற தோழர் சீத்தாராம் யெச்சூரி இந்த தேசம் வலதுசாரிப்பதையில் செல்வதை தடுத்து நிறுத்தக் கூடிய வகையில் அனைவரையும் ஒன்றிணைத்து இந்தியாவின் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் இந்த தேசம் நடை போட வேண்டும் என்று தன்னுடைய எல்லா பொறுப்புகளையும் பயன்படுத்தி அனைத்து தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் வழிகாட்டியாக அமைந்தார். தன்னுடைய போர்குணமிக்க அறிவாற்றலால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக உயர்ந்து உலக கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு மார்க்சியத்தை சரியான பாதையில் நடைமுறை படுத்துவதை வழி காட்டியது மட்டுமல்லாமல் போராடுகின்ற தொழிலாளி வர்க்க அமைப்புகளுக்கும் ஆதரவு கரம் நீட்டியதோடு போராட்டம் வெற்றி அடைய வழி காட்டவும் செய்தார்.

இந்திய தேசத்தில் விவசாய வர்க்கம் போராடிய போது போராட்ட களத்திற்கே சென்று விவசாயிகளின் போராட்டத்தை உற்சாகப்படுத்தி அதனுடைய குறை நிறைகளை சுட்டிக்காட்டி ஒரு வலுவான போராட்டத்தை நடத்துவதற்கு வழிகாட்டியவர் தோழர் சீதாராம் யெச்சூரி. அண்டை நாடுகளோடு நட்புறவோடும் நேசகரத்தோடும் கட்சியும் இருக்க வேண்டும் இந்த தேசமும் இருக்க வேண்டும் என்று ஒவ்வொரு முறையும் பாராளுமன்றத்தில் தன்னுடைய உரையின் மூலம் தொடர்ந்து பதிவு செய்தவர். இன்றைய நிலையில் தோழர் சீத்தாராம் யெச்சூரி அவர்களின் வழிகாட்டல் என்பது நம்மை போன்ற போராடும் அரசு ஊழியர்களுக்கு தேவையான போதும் அவரது வழிகாட்டலை கற்றுணர்ந்து இந்த தேசத்தின் அரசு ஊழியர் ஆசிரியர்களின் வாழ்வுக்காகவும் தொழிலாளர் வர்க்கத்தின் ஒற்றுமைக்காகவும் தோழர் யெச்சூரி அவர்களின் வழியை பின்பற்றுவது நம்முன் இருக்கும் கடமையாகும். ●

# தமிழக முதல்வரின் தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி, 19.09.2024 அன்று அனைத்து அரசு அலுவலகம் முன்பாக

# கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

புதிய ஓய்வூதிய திட்டத்தை கைவிட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும். சிறப்பு காலமுறை ஊதியத்தில் 41 ஆண்டுகளாக பணிபுரிந்து வரும் சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர் உள்ளிட்ட ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்க வேண்டும்.அரசுத் துறைகளில் அத்துக்கூலி முறையில் ஊர்ப்புற நூலகர்கள், எம்ஆர்பி செவிலியர்கள் உள்ளிட்ட தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் மூன்றரை லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு முறையான காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்.

கொரோனாவை காரணம் காட்டி நான்கு ஆண்டுகள் முடக்கப்பட்ட ஈட்டிய விடுப்பு ஒப்புவிப்பு மேலும் காலம் குறிப்பிடாமல் தடை செய்ததை உடன் திரும்ப பெறவேண்டும்.சாலை பணியாளர்களின் 41 மாத பணி நீக்கக் காலத்தை பணிவரன்முறை செய்திடவேண்டும்.தமிழக அரசின் பள்ளிக் குழந்தைகளின் காலை உணவுத் திட்டத்தை சத்துணவு ஊழியர்கள் மூலமாக செயல்படுத்திட வேண்டும்.தமிழக அரசு துறைகளில் காலியாக உள்ள 4.8 லட்சத்திற்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களை போர்க்கால அடிப்படையில் உடனடியாக நிரப்பிடவேண்டும். 21 மாத ஊதிய மாற்ற நிலுவை தொகையை உடனடியாக வழங்கிடவேண்டும்.

ஊதிய உச்சவரம்பின்றி அனைவருக்கும் ஒருமாத ஊதியம் போனஸ் வழங்கவேண்டும். எ மற்றும் பி பிரிவு ஊழியர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டதுபோல் மிகை ஊதியம் வழங்கவேண்டும். WIPRO வசம் உள்ள IFHRMS திட்டத்தில் உள்ள குளறுபடிகள் மற்றும் குறைகளை சரி செய்து முழுமையாக தமிழக அரசே ஏற்று நடத்த வேண்டும். புதிய மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தை முழுமையாக அரசே ஏற்று நடத்த வேண்டும். மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் நிரந்தரப் பணியிடங்களை அழித்திடும் அரசாணை எண் 152, 115, 139, 10, 297 ஐ உடனடியாக ரத்து செய்யப்படவேண்டும்.

கருணை அடிப்படையில் பணி நியமன குறித்து மொத்த பணியிடங்களில் 25 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாக குறைக்கப்பட்ட அரசாணை 33 உடனடியாக ரத்து செய்ய வேண்டும், உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தேனியில் நடைபெற்ற மாநில செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி 19.09.2024 அன்று அனைத்து அரசு அலுவலகங்கள் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**திருச்சிராப்பள்ளி**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசு மருத்துவமனையில் வட்டக்கிளை செயலாளர் மணிகண்டன் தலைமையிலும், இஎஸ்ஐ மருத்துவமனை வட்டக்கிளை தலைவர் சுரேஷ் பிரபு தலைமையிலும், இணை இயக்குநர் வேளாண்மை துறை அலுவலகத்தில் கவியரசன் தலைமையிலும், பல்துறை கட்டட வளாகத்தில் மாவட்ட இணைச் செயலாளர் அமுதவல்லி தலைமையிலும், திருவெறும்பூர் ஊராட்சி

ஒன்றிய அலுவலகத்தில் வட்டக்கிளை தலைவர் சந்திரா தலைமையிலும், திருவெறும்பூர் சார்நிலை கருவூல அலுவலகம், அரசு ஐடிஐ மாவட்ட செயலாளர் பாபு தலைமையிலும், துவாக்குடி அரசு அச்சகத்தில் வட்டக்கிளை நிர்வாகி பாக்கியராஜ், லெனின் தலைமையிலும், மணிகண்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டக்கிளை நிர்வாகி பாலசுப்பிரமணியன் தலைமையிலும், மணப்பாறை அரசு மருத்துவமனையில் வட்டக்கிளை செயலாளர் சுந்தர்ராஜ் தலைமையிலும், மருங்காபுரி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டக்கிளை நிர்வாகிகள் நெல்சன் ஆரோக்கியராஜ், மல்லிகா, துறையூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டக்கிளை செயலாளர் மணிமாறன், முசிறி வட்டக்கிளை முசிறி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டக்கிளை நிர்வாகி சித்ரா, தா.பேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டக்கிளை செயலாளர் அமுதா தலைமையிலும், தொட்டியம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டக்கிளை செயலாளர் மணிவண்ணன், தொட்டியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டக்கிளை நிர்வாகி சாந்தி தலைமையிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருச்சி கோட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட தலைவர் பால் பாண்டி தலைமையில் நடைபெற்றது. இதில் சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் மலர்விழி, முன்னாள் மாநிலத் தலைவர் பழனிச்சாமி வாழ்த்துரை வழங்கினார்கள்.

இறுதியாக திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் முனைவர் பால்பாண்டி தலைமை வகித்து கோரிக்கை விளக்கவுரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தை வாழ்த்தி தமிழ்நாடு வருவாய் துறை அலுவலர் சங்க மாவட்ட செயலாளர் பொன் மாடசாமி, அரசு ஐடிஐ சங்க மாநில செயலாளர் நவநீதன், தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ரஞ்சித் குமார், சாலைப் பணியாளர் சங்கம் தேவா ஆகியோர் பேசினார்கள். அரசு ஊழியர் சங்க மாநில துணைத்தலைவர் பெரியசாமி நிறைவுரையாற்றினார். வட்டக்கிளை தலைவர் சுரேஷ் பிரபு நன்றி கூறினார். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இருபது அலுவலகங்கள் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட நிர்வாகிகள் ஜீவானந்தம், அல்போன்ஸ், அமுதவல்லி, துறை சங்க நிர்வாகிகள் சங்கரநாராயணன், சண்முகம் உள்ளிட்ட மாவட்ட வட்டக்கிளை நிர்வாகிகள் மற்றும் ஏராளமான அரசு ஊழியர் கலந்து கொண்டனர்.

**தஞ்சாவூர்**

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆர்ப்பாட்டங்கள் மிக சக்தியாகவும், எழுச்சியோடும் நடைபெற்றது தஞ்சை வடக்கு 09 இடங்கள் 283 பேர், தஞ்சை தெற்கு 03 இடங்கள் 150 பேர், பூதலூர் 01இடம் 50 பேர், திருவையாறு 2 இடங்கள் 65 பேர், பாபநாசம் 02 இடங்கள் 90 பேர், கும்பகோணம் 05 இடங்கள் 150 பேர் கலந்து கொண்டனர்.

**இராம நாதபுரம்**

இராம நாதபுரம் மாவட்டத்தில் மாநில செயற்குழு முடிவின்படி முதுகுளத்தூர் வட்டாச்சியர் அலுவலகம், பேரூராட்சி, நெடுஞ்சாலை, மற்றும் பொதுப்பணித்துறை அலுவலங்கள் முன்பாக மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் திருமுருகன் தலைமையில் நடத்தப்பட்டது. திருவிடைமருதூர் 01 இடம் 55 பேர், ஒரத்தநாடு 03 இடங்கள் 100 பேர், பட்டுக்கோட்டை 04 இடங்கள் 130 பேர், பேராவூரணி 01 இடம் 47 பேர், என மொத்தம் 32 இடங்களில் மொத்தம் 1320 பேர் பங்கேற்றுள்ளனர்.

**மேட்டூரில்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு முடிவிற்கிணங்க 1000 அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது மேட்டூரில் ஒன்பது அலுவலகம் முன்பு நடைபெற்றது. வருவாய்த்துறை,

நெடுஞ்சாலைத்துறை,நகராட்சி, வேளாண்மை துறை அரசினர் தொழிற்பயிற்சி மையம், மீன்வளத்துறை,கருவூல கணக்கு துறை, நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம் ஆகிய இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வட்டக்கிளை தலைவர் காமராஜ், வட்ட இணை செயலாளர் ஆர் மீனாட்சிசுந்தரம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் ரமேஷ் குமார் கே.என்.வெற்றிவேல், கோகிலா இணைச் செயலாளர் அரசினர் தொழிற்பயிற்சி மையம் வட்டக்கிளை செயலாளர் கறீம் சாலைப் பணியாளர் வட்டக்கிளை தலைவர் பழனிச்சாமி சாலை பணியாளர் சங்கத்தின் வட்டக்கிளை செயலாளர் அர்ஜுனன் தமிழ்நாடு அரசுஊழியர் சங்கத்தின் இணைச்செயலாளர் கார்த்திகேயன் மாவட்ட இணைச் செயலாளர் து சிங்கராயன், இந்திய தொழிற்சங்க மையத்தின் சிஐடியு மாவட்ட துணைத் தலைவர் சி.கருப்பண்ணன், எஸ். முருகேசன் நில அளவை அலுவலர் ஒன்றிப்பு மாநிலச் செயலாளர் ,வட்டக்கிளை இணைச் செயலாளர் ராஜா சத்துணவு ஊழியர் சங்கத்தின் கொளத்தூர் ஒன்றிய தலைவர் விஜயா ஆகியோர் பங்கேற்று இந்த ஆர்ப்பாட்டத்தை சிறப்பித்தனர்.

**வேலூர்**

திமுக தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வலியுறுத்தி தமிழக முதல்வரின் கவனம் ஈர்த்திடும் வகையில் அனைத்து அலுவலகங்கள் முன்பாக 19 9 2024 வியாழக்கிழமை ஆகிய இன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது வேலூர் மாவட்டத்தில் கீழ்கண்ட அலுவலகங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம்

1. பேர்ணாம்பட் ஊராட்சி ஒன்றியம்-ஆண் ஊழியர்கள் 20 பெண் ஊழியர்கள் 25
2. பேர்ணாம்பட்டு வட்டாட்சியர் அலுவலகம் ஆண் ஊழியர்கள் 10 பெண் ஊழியர்கள் 12
3. குடியாத்தம் ஊராட்சி ஒன்றியம் ஆண் ஊழியர்கள் 22 பெண் ஊழியர்கள் 31
4. குடியாத்தம் வட்டாட்சியர் அலுவலகம் ஆண் ஊழியர்கள் 11 பெண் ஊழியர்கள் 13
5. கே வி குப்பம் ஊராட்சி ஒன்றியம் ஆண் ஊழியர்கள் 25 பெண் ஊழியர்கள் 32
6. அடுக்கம்பாறை மருத்துவமனை ஆண் ஊழியர்கள் 12 பெண் ஊழியர்கள் 9
7. கணியம்பாடி ஊராட்சி ஒன்றியம் ஆண் உழியர்கள் 9 பெண் ஊழியர்கள் 12
8. வேளாண்மை துறை அலுவலகம் ஆண் ஊழியர்கள் 20 பெண் ஊழியர்கள் 21
9. வேலூர் வட்டாட்சியர் அலுவலகம் ஆண் ஊழியர்கள் 12 பெண் ஊழியர்கள் 8
10. வணிகவரித்துறை அலுவலகம் ஆண் ஊழியர்கள் 40 பெண் ஊழியர்கள் 36
11. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் ஆண் ஊழியர்கள்40 பெண் ஊழியர்கள் 62
12. அணைக்கட்டு வட்டாட்சியர் அலுவலகம் ஆண் 10 பெண் ஊழியர் 5
13. காட்பாடி வட்டாட்சியர் அலுவலகம் ஆண் ஊழியர் 7 பெண் தோழர்கள் 8
14. கே வி குப்பம் வட்டாட்சியர் அலுவலகம் ஆண் தோழர் 6 பெண் ஊழியர்கள் 9

ஆக மொத்தம் ஆண் ஊழியர்கள் 234 பெண் ஊழியர்கள் 256

மேற்கண்டவாறு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை மாவட்ட நிர்வாகிகள் தோழமை சங்க நிர்வாகிகள் முன்னணி தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் அனைத்து உறுப்பினர்களுக்கும் அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக புரட்சிகர வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

**கரூர் மாவட்டம்**

நமது சங்கத்தின் மாநில செயற்குழுமுடிவின் அடிப்படையில் கடந்த 19.09.2024 அன்று தமிழக முதல்வரின் தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி, அனைத்து அரசு அலுவலகம் முன்பாக கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம், கரூர் மாவட்ட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சங்கத்தின் சார்பில் மாவட்டம் முழுவதும் மொத்தம் 24 அலுவலகம் முன்பாக கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற்றது. மொத்தம் 178 மகளிர் உட்பட 503 பேர் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட வட்டக்கிளை நிர்வாகிகள், துறைவாரிச்சங்கத் தலைவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை மற்றும் கருத்துரையாற்றினார்கள். கரூர் மாவட்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்களிப்பு சார்பாக கீழ்க்கண்டவாறு விபரங்கள் அனுப்பி வைக்கப்படுகிறது.

**1.கரூர்-1 வட்டக்கிளை :**

இந்த வட்டக்கிளையின் சார்பில் 02 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 1.கரூர், நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் அலுவலகம்

2.கரூர்,வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கரூர் மாவட்டத்தலைவர் தோழர்.எம்.எஸ். அன்பழகன், மாவட்டப்பொருளாளர் தோழர். எல்.பாலசுப்பிரமணி, வட்டத்தலைவர் தோழர்.சிவக்குமார், மாவட்ட மகளிர் துணைக்குழு உறுப்பினர் தோழர்.சுமதி, நகராட்சி/மாநகராட்சி ஊழியர் சங்கத்தின் மாவட்டப்பொறுப்பாளர் தோழர். கே.அறிவழகன் உட்பட துறைவாரிச்சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டங்களில் 13 மகளிர் உட்பட 45பேர் கலந்து கொண்டனர்.

**2.கரூர்-2 வட்டக்கிளை :**

இந்த வட்டக்கிளையின் சார்பில் 03 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 1. கரூர், கூட்டுறவு இணைப்பதிவாளர் அலுவலகம் 2.கரூர்,தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகம் 3. கரூர்,மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் வளாகக்கட்டிடம். ஆகிய அலுவலகங்கள் முன்பாக நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கரூர் மாவட்டச்செயலாளர் தோழர்.பொன். ஜெயராம், மாவட்ட இணைச்செயலாளர் தோழர்.ஆ.சங்கர், வட்டச்செயலாளர் தோழர்.முருகேசன், மாவட்ட மகளிர் துணைக்குழு உறுப்பினர் தோழர்.சுதா, உட்பட துறைவாரிச்சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டங்களில் 28 மகளிர் உட்பட 65பேர் கலந்து கொண்டனர்.

**3.கரூர்-3 வட்டக்கிளை :**

இந்த வட்டக்கிளையின் சார்பில் 05 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 1. வடக்குப்பாளையம், அரசு ஆரம்பசுகாதார நிலையம் 2.புலியூர்,பேரூராட்சி அலுவலகம் 3. உப்பிடமங்கலம், பேரூராட்சி அலுவலகம் 4.புலியூர், வேளாண் பொறியியல் துறை அலுவலகம் 5.கரூர், அரசு மருத்துவக்கல்லுhரி மருத்துவமனை ஆகிய அலுவலகங்கள் முன்பாக நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கரூர் மாவட்டதுணைத்தலைவர்கள் தோழர்.சி.கண்ணன், தோழர்.சி.முருகேசன் மாவட்ட இணைச்செயலாளர் தோழர். இரா.முத்துமாரி, வட்டத்தலைவர் தோழர். ஆர்.பிரேம்குமார், வட்டச்செயலாளர் தோழர்.ஏ.பி.சுப்பிரமணியன், மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர்.பிரவீணா, உட்பட துறைவாரிச்சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டங்களில் 42 மகளிர் உட்பட 120பேர் கலந்து கொண்டனர்.

**4.மண்மங்கலம் வட்டக்கிளை :**

இந்த வட்டக்கிளையின் சார்பில் 03 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 1. அய்யம்பாளையம், அரசு ஆரம்பசுகாதார நிலையம் 2.மண்மங்கலம்,வட்டாட்சியர் அலுவலகம் 3. வெண்ணைமலை, ஊராட்சி ஒன்றிய அலுவலகம் ஆகிய அலுவலகங்கள் முன்பாக நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கரூர் மாவட்டதுணைத்தலைவர் தோழர். கு.செல்வராணி, வட்டச்செயலாளர் தோழர்.வ.கோபி, வட்டத்தலைவர் தோழர். பாஸ்கர்ராஜ், மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர்.ருக்மணி, உட்பட துறைவாரிச்சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டங்களில் 17 மகளிர் உட்பட 58பேர் கலந்து கொண்டனர்.

**5. கிருஷ்ணராயபுரம் வட்டக்கிளை :**

இந்த வட்டக்கிளையின் சார்பில் 07 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 1. சேங்கல், அரசு ஆரம்பசுகாதார நிலையம்

2.கிருஷ்ணராயபுரம், பேரூராட்சி அலுவலகம் 3. கிருஷ்ணராயபுரம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் 4.கிருஷ்ணராயபுரம்,பொதுப்பணித்துறை அலுவலகம், 5.கிருஷ்ணராயபுரம், அரசு பொதுமருத்துவமனை 6. பழையஜெயங்கொண்டம், பேரூராட்சி அலுவலகம் 7.மாயனுhர், பொதுப்பணித்துறை அலுவலகம் ஆகிய அலுவலகங்கள் முன்பாக நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநிலத்துணைத்தலைவர் தோழர். மு.செல்வராணி, வட்டச்செயலாளர் தோழர். அறிவுக்கண்ணு, வட்டத்துணைத்தலைவர் தோழர்.தமிழ்மணி, உட்பட துறைவாரிச்சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டங்களில் 35 மகளிர் உட்பட 160 பேர் கலந்து கொண்டனர்.

**6. குளித்தலை வட்டக்கிளை :**

இந்த வட்டக்கிளையின் சார்பில் 01 இடத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. குளித்தலை, வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநிலத்துணைத்தலைவர் தோழர்.மு.செல்வராணி, வட்டச்செயலாளர் தோழர்.பரிமணம், வட்டத்தலைவர் தோழர்.க.பாண்டிக்கண்ணன், வட்டத்துணைத்தலைவர் தோழர். செவந்திலிங்கம், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்டத்தலைவர் தோழர்.வைரபெருமாள் உட்பட துறைவாரிச்சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்த ஆர்ப்பாட்த்தில் 12 மகளிர் உட்பட 28 பேர் கலந்து கொண்டனர்.

**7. அரவக்குறிச்சி வட்டக்கிளை:**

இந்த வட்டக்கிளையின் சார்பில் 02 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 1. அரவக்குறிச்சி, ஊராட்சி ஒன்றிய அலுவலகம் 2.அரவக்குறிச்சி, வட்டாட்சியர் அலுவலகம், ஆகிய அலுவலகங்கள் முன்பாக நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட இணைச்செயலாளர் தோழர். கே.இளங்கோ, வட்டச்செயலாளர் தோழர். எம்.பாஸ்கர், வட்டப்பொருளாளர் தோழர். பாபுராஜ் உட்பட துறைவாரிச்சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டங்களில் 22 மகளிர் உட்பட 43 பேர் கலந்து கொண்டனர்.

**8.க.பரமத்தி வட்டக்கிளை :**

இந்த வட்டக்கிளையின் சார்பில் 01 இடத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. க.பரமத்தி, ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பாக நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்டத்துணைத்தலைவர் தோழர். எம்.கிருஷ்ணமூர்த்தி, வட்டச்செயலாளர் தோழர்.சிவகாமி, வட்டத்தலைவர் தோழர். சண்முகசுந்தரம் உட்பட துறைவாரிச்சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்த ஆர்ப்பாட்த்தில் 09 மகளிர் உட்பட 21 பேர் கலந்து கொண்டனர். ●

## ஆசை

உப்பு குறைந்ததற்காய்
சூடான குழம்பைத்
தலையில் கொட்டிய
தாத்தாவைப் பற்றிக்
கதை சொல்லும் பாட்டி
எப்போதும் முடிக்கிறாள்
என் மேல் அவருக்குக்
கொள்ளை ஆசை என்று...

ஒவ்வொரு முறையும்
புரியாமல் யோசிக்கிறேன்
ஆசைக்கான அர்த்தத்தை...

**– கிருஷ்ணபிரியா**

# 26.09.2024 அகில இந்திய கோரிக்கை நாள் ஆர்ப்பாட்டம்

தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத் நகரில் நடைபெற்ற அகில இந்திய மாநில அரசு ஊழியர் சங்கத்தின் தேசிய செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு மற்றும் தேனியில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்ட தீர்மானங்களின் படி 26/09/2024ல் நடைபெறும் மாவட்டத்தலைநகரங்களில்

1.PFRDA சட்டத்தை ரத்து செய்து NPSல் டெபாசிட் செய்யப்பட்ட தொகையை மாநில அரசுகளுக்கு திருப்பித் தருமாறு நிதி மேலாளர்களுக்கு உத்திரவிடவும், NPS 95ன் கீழ் அனைத்து சந்தாதாரர்களையும் பயனளிப்பு ஓய்வூதிய முறைக்கு கொண்டு வரவேண்டும்.

2.Contractual/ Outsourced / Daily Waged நியமன முறையை ரத்து செய்து, அவ்வாறு பணி நியமனம் செய்யப்பட்ட ஊழியர்களை காலமுறை ஊதியத்தில் வரன்முறைப் படுத்திட வேண்டும்.

3.பொதுத்துறை/அரசுத்துறைகளை குறைப்பதை மற்றும் தனியார்மயப்படுத்தப் படுவதை உடனே நிறுத்திட வேண்டும்.

4.ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை காலமுறை ஊதிய திருத்தத்தை உறுதி செய்திட வேண்டும். நிறுத்தி வைக்கப்பட்ட அகவிலைப்படி நிலுவையின்றி வழங்கிட வேண்டும்.

5.அரசின் கண்காணிப்பில் விரிவான கட்டணமில்லா மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அனைத்து அரசு ஊழியர்கள் /ஓய்வூதியர்கள்/ஒப்பந்த, தினக்கூலி ஊழியர்களுக்கும் உத்திரவாதப்படுத்தப்பட வேண்டும்.

6.தேசியக் கல்விக் கொள்கையை (New Education Policy) கைவிட வேண்டும்.

7.அரசியலமைப்புத் சட்ட சரத்தில் Article 310,311(2)a,b,&cல் திருத்தம் செய்யப்பட்ட புதிய மூன்று குற்றவியல் சட்டங்களை திரும்பப் பெற வேண்டும்.

8.அரசியலமைப்பில் பொதிந்துள்ள மதச்சார்பின்மையை நிலை நிறுத்திடவும். அனைத்து வகையான வகுப்புவாதங்களை எதிர்த்து போராட வேண்டும்.

9.மத்திய, மாநில அரசுகளின் உறவுகளை மறுவரையறை செய்திடவும், கூட்டுறவு கூட்டாட்சித் தத்துவத்தை பாதுகாத்திட வேண்டும்.

10.வருமானவரி உச்சவரம்பை 10 இலட்சமாக உயர்த்திட வேண்டும் அகில இந்திய கோரிக்கை நாள் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

**மதுரை மாவட்டம்**

இன்று (26.09.2024 - வியாழக்கிழமை) மாலை 5.30 மணிக்கு மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக அகில இந்திய கோரிக்கை நாள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மத்திய அரசு மாநில அரசுகளிடம் கூட்டாட்சி கொள்கையினை கடைபிடிக்காத நிலையில் புதிய பென்ஷன் திட்டத்தை மாற்றி பழைய பென்ஷன் வழங்கிய மாநில அரசுகளுக்கு நெருக்கடி ஏற்படுவதுடன் மற்ற மாநில அரசுகளும் பழைய பென்ஷன் வழங்க மறுத்து வருகிறது எனவே மத்திய அரசு, அரசு ஊழியர் ஆசிரியர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி நாடு தழுவிய போராட்டம் நடத்த அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் முடிவு செய்துள்ளது அதன் அடிப்படையில் இன்று (26.09.2024 -

வியாழக்கிழமை) மாலை 5.30 மணிக்கு மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக அகில இந்திய கோரிக்கை நாள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தலைமை பெ.சந்திரபாண்டி, மாவட்டத்துணைத்தலைவர், முன்னிலை ஜெ.மூர்த்தி, மாவட்டத்தலைவர், த.மனோகரன், ஜெ.மகேந்திரன், மாவட்டத் துணைத்தலைவர்கள் ஆ.பரமசிவன், மு.ராம்தாஸ், சு.பாண்டிச்செல்வி, மாவட்ட இணைச்செயலாளர்கள், கோரிக்கை விளக்கவுரை க.நீதிராஜா, மாவட்டச்செயலாளர், வாழ்த்துரை, அ.பால்முருகன், மாவட்டச்செயலாளர் தமிழ்நாடு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கம், இரா.லெனின் மாவட்டச்செயலாளர். இந்திய தொழிற்சங்க மையம், எமிமால் ஞானசெல்வி, மாவட்டப்பொருளாளர் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, நிறைவுரை: ஆ.செல்வம், பொதுச்செயலாளர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், நன்றியுரை க.சந்திரபோஸ், மாவட்டப்பொருளாளர்.

**விருதுநகர் மாவட்டம்**

26.09.2024 அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் தோழர் த.பால்முருகன் தலைமை தாங்கினார். வரவேற்புரை கு.இராஜகுரு- மாவட்ட இணைச் செயலாளர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், முன்னிலை தோழர்கள் எஸ்.மணிமாலாபாண்டியன், எஸ்.ஜேசுடெல்குயின் வாழ்த்துரை தோழர் ஜெகதீசன் மேனாள் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவரும் விருதுநகர் தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் கிளை தலைவர், தோழர் ரவி. மாவட்ட துணைத் தலைவர், தமிழ்நாடு முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் கழகம் தோழர் பாலசுப்பிரமணியம், முன்னாள் கல்வி மாவட்ட செயலாளர் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, தோழர் வெ.குருசாமி மாவட்ட தலைவர், தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் தோழர் ஆர்.போத்திராஜ் மாநில செயற்குழு உறுப்பினர் -விருதுநகர் கிளை செயலாளர் ஆகியோர் பேசினார், கோரிக்கைகளை விளக்கவுரை கா.கருப்பையா மாவட்ட செயலாளர் பேசினார், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட செயலாளர் தோழர் த.இர. செல்வகணேஷசன் நிறைவுரையாற்றினார் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் தோழர் - என்.சரோஜினிதேவி நன்றி கூறினார், ஆர்ப்பாட்டத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**திருவாரூர் மாவட்டம்**

அகில இந்திய அரசு ஊழியர் சம்மேளனத்தின் முடிவின்படி 26/09/24 அன்று திருவாரூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கோரிக்கை தின ஆர்ப்பாட்டம் மாவட்ட தலைவர் எஸ். செங்குட்டுவன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது, அனைத்து துறைஓய்வூதியர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் தோழர் குரு.சந்திரசேகரன் துவக்கவுரை ஆற்றினார். மாவட்ட செயலாளர் செ.பிரகாஷ் கோரிக்கை விளக்க உரையாற்றினார், அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் அகில இந்திய அரசு ஊழியர் சம்மேளத்தின் தேசிய செயற்குழு உறுப்பினர் தோழர் எம்.சௌந்தரராஜன் சிறப்புரையாற்றினார், அனைத்து துறை வாரிச் சங்க மாநில, மாவட்ட நிர்வாகிகள் கோரிக்கை ஆர்ப்பாட்ட உரையாற்றினார்கள், நிறைவாக தமிழ்நாடு அரசு சங்கத்தின் மாநில துணை பொதுச்செயலாளர் வெ.சோமசுந்தரம் நிறைவுறியாற்றினார். மாவட்ட பொருளாளர் தோழர் தெட்ணாமூர்த்தி நன்றி உரை கூற நிகழ்வு நிறைவுற்றது.

**கரூர் மாவட்டம்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தேனி, மாநில செயற்குழு முடிவின்அடிப்படையில், அகில இந்திய கோரிக்கை நாள் ஆர்ப்பாட்டம் கடந்த 26.09.2024 அன்று கரூர்,

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட இணைச்செயலாளர் தோழர்.ஆ.சங்கர் தலைமை தாங்கினார். மாவட்ட இணைச்செயலாளர் தோழர்.கே.இளங்கோ வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட செயலாளர் தோழர்.பொன்.ஜெயராம் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். இக்கூட்டத்தில் முன்னாள் மாநிலத்துணைத்தலைவர் தோழர். மு.சுப்பிரமணியன், தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்டச்செயலாளர் தோழர்.கே.சக்திவேல், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநிலச்செயலாளர் தோழர்.ஜ.ஜெயராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாவட்டத்துணைத்தலைவர் தோழர்.ஆர். முருகேசன், மாவட்ட இணைச்செயலாளர் தோழர்.ஆர்.முத்துமாரி, கரூர்-3 வட்டக்கிளைத் தலைவர் தோழர்.ஆர்.பிரேம்குமார், தமிழ்நாடு ஆய்வக நுட்புனர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் தோழர்.ஏ.பி. சுப்பிரமணி, தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர்கள் சங்கத்தின் மாவட்டச்செயலாளர் தோழர்.வ.கோபி, மாநிலசெயற்குழு உறுப்பினர் தோழர்.வே.பாலசுப்பிரமணி, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்டத்தலைவர் தோழர்.கு.செல்வராணி, தமிழ்நாடு எம்.ஆர்.பி.செவிலியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் தோழர்.எம்.பிரவீனா, தமிழ்நாடு ஓய்வுபெற்ற சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்டச்செயலாளர் தோழர். பி.பாலகிருஷ்ணன், தமிழ்நாடு ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்டப்பொறுப்பாளர் தோழர்.சுரேஷ், தமிழ்நாடு நுண்கதிர் பிரிவு உதவியாளர்கள் சங்கத்தின் மாவட்டத்தலைவர் தோழர்.விஜயகுமார், ஆய்வக நுட்புனர் தோழர்.சுரேஷ்குமார் உள்ளிட்ட பல்வேறு துறைவாரிச்சங்க நிர்வாகிகளும், ஊழியர்களும் கலந்து கொண்டனர். மாநிலத்துணைத்தலைவர் தோழர்.மு.செல்வராணி நிறைவுரையாற்றினார். இறுதியாக மாவட்டப்பொருளாளர் தோழர். எல்.பாலசுப்பிரமணி நன்றியுரையாற்றினார்.

**திண்டுக்கல் மாவட்டம்**

திண்டுக்கல் மாவட்ட மையத்தின் சார்பாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தலைமை ச. முபாரக் அலி கோரிக்கை விளக்கவுரை ம.சுகந்தி வாழ்த்துரை அ.ஜெசி மாநில செயலாளர் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் டி. ராஜமாணிக்கம் மாநில துணை தலைவர் நெடுஞ்சாலைத் துறை சாலை பணியாளர் சங்கம் ஜான் பாஸ்டின் டல்லஸ் மாவட்டத் தலைவர் தமிழ்நாடு வருவாய் துறை அலுவலர் சங்கம் நன்றி ச. குப்புசாமி மாவட்ட பொருளாளர்.

**ஈரோடு மாவட்டம்**

ஈரோடு மாவட்டத்தில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் கோரிக்கை நாள் ஆர்ப்பாட்டம் மிகுந்த எழுச்சியோடு நடத்தப்பட்டது. இதில் 70 தோழர்கள் பங்கேற்றார்கள்

**திருச்சிராப்பள்ளி மாவட்டம்**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 26.09.2024 வியாழக்கிழமை மாலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட தலைவர் முனைவர் பால் பாண்டி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர் தோழர் வெங்கடேசன் வரவேற்புரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் ஜீவானந்தம், மாவட்ட இணைச் செயலாளர் தோழர் அல்போன்ஸ், அமுதவல்லி முன்னிலை வகித்தார்கள். தமிழ்நாடு அரசு தொழிற்பயிற்சி பள்ளி அலுவலர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் நவநீதன் ஆர்ப்பாட்டத்தை துவங்கி வைத்தார். மாவட்டச் செயலாளர் தோழர் பாபு கோரிக்கைகள் குறித்து விளக்கவுரையாற்றினார்.

சிஐடியு மாநகரச் செயலாளர் ரெங்கராஜன், அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் சிராஜீதீன், சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர்

அமுதா, மின்வாரிய சங்கத்தின் நிர்வாகி இருதயராஜ், சாலைப் பணியாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் ஜீவானந்தம், வேளாண்மை துறை நிர்வாக ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் கருணாநிதி, நீதித்துறை ஊழியர் சங்கத்தின் தமிழ்செல்வன், புள்ளியியல் சார் நிலை அலுவலர் சங்கத்தின் மாவட்ட சேவைகள் ராமேஷ்பாபு, அரசு தொழிற்பயிற்சி அலுவலர் சங்கத்தின் மாவட்ட தலைவர் கோபாலகிருஷ்ணன், முன்னாள் மாவட்ட செயலாளர் பழனிச்சாமி, பொதுப்பணித்துறை செந்தில்குமார், மீன்வளத் துறை வீரமணி, விடுதி காப்பாளர் சங்கத்தின் வினோத் உள்ளிட்ட மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள் மற்றும் தோழமை சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினார்கள். மாநில துணைத் தலைவர் பெரியசாமி சிறப்புரையாற்றினார். மாவட்ட பொருளாளர் சிவசங்கர் நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் அனைத்து துறை ஊழியர்களும் திரளாக கலந்து கொண்டார்கள்.

**தருமபுரி மாவட்டம்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் சார்பில் அகில இந்திய கோரிக்கைநாள் ஆர்ப்பாட்டம் தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன் தலைமைவகித்தார். மாவட்ட செயலாளர் ஏ.தெய்வானை, மாவட்ட பொருளாளர் முன்.அன்பழகன், மாநிலசெயற்குழு உறுப்பினர் முருகன் மாவட்ட துணைத்தலைவர் குணசேகரன், தேவகி, வட்ட நிர்வாகிகள் பன்னீர், மணிவண்ணன், மாரியப்பன், மூர்த்தி, திம்மராயன், மாணிக்கம், ஆகியோர் கோரிக்கைகளை பேசினர். தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட தலைவர் முகமது இலியாஸ், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மத்தில் செயலாளர் பெ.மகேஸ்வரி அனைத்துதுறை ஓய்வூதியர் சங்க மாவட்ட செயலாளர் எம்.பெருமாள் தணிக்கையாளர் கே.புகழேந்தி ஆகியோர் வாழ்த்திபேசினர். ●

# வாசகர் கடிதம்

**கா. பால் பாண்டி.**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வரலாற்றில் நான் கண்ட மூன்றாவது தலைவர், முன்னாள் மாநிலத் தலைவர் பெரும் மதிப்பிற்குரிய தோழர் அன்பரசு அவர்களின் தெலுங்கானாவில் நடைபெற்ற அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தேசிய செயற்குழு கூட்டத்தில் ஆற்றிய உரை பதிவுகள் அனைத்தும் அனைவரும் படிக்க வேண்டியது. ஒரு தலைவரின் கடமைகள், நன்னடத்தை, தன்னடக்கம், விடா முயற்சி, தொடர் போராட்டங்கள், என்னவென்பதை அருமையாக எடுத்துக் கூறியுள்ளார். உரையை படிக்க படிக்க இதயம் கனிந்து கண்களில் கண்ணீர் வரவழைத்து விட்டது. 38 ஆண்டுகள் ஒரு நெடிய பயணம் போதும் தோழரே, நீங்கள் ஓய்வு எடுங்கள், உங்கள் உடல் நலத்தை கவனியுங்கள். நீங்கள் பூரண குணமடைய இயற்கை அருள் புரியட்டும்.

உங்கள் கனவும், உங்கள் இலட்சியத்தை, உங்கள் போராட்ட பதாகையை நாங்கள் தூக்கி பிடிப்போம். நிச்சயமாக உங்கள் லட்சியத்தை நிறைவேற்ற நீங்கள் காட்டிய போராட்ட பாதையில் நாங்கள் பயணிப்போம். தோழரே. என்றும் உங்கள் போராட்ட பாதையில். ●

தமிழ்நாடு அரசு மருத்துவ ஆய்வக நுட்பனர் சங்கத்தின்

**கோட்டை நோக்கி பேரணி** 13.09.2024



கட்டுரை

# எள்ளளவும் பயனற்ற Unified Pension Scheme

**- பிரகாஷ்**

ஒன்று புதிய ஓய்வூதிய திட்டம் (NPS) என்று அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு ஓய்வூதிய திட்டம் பழைய ஓய்வூதிய திட்டமாக (OPS) நம்மால் அடையாளப்படுத்தப்பட்டு கொண்டிருக்கிறது. தமிழ்நாடு மாநிலத்தை தவிர மற்ற மாநிலங்கள் ஏதோ ஒன்றில் இருக்கின்றன தமிழ்நாட்டில் முற்றிலும் இந்த இரண்டு திட்டங்கள் இல்லாமல் புதிய ஓய்வூதிய திட்டத்தின் பெயரில் பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் (CPS) என்று ஊழியர்களிடமிருந்து பணத்தைப் பிடித்து வைத்துக் கொண்டுள்ளது.

இதற்கு இடையில் மத்திய அரசு எந்தவிதமான கலந்துரையாடல்களும் இல்லாமல் தொழிற்சங்க கூட்டமைப்புகளை அழைக்காமல் UPS என்ற ஒன்றை அறிவித்துள்ளது அவர்கள் அறிவித்த பொழுது 10 ஆண்டுகள் பணிபுரிந்தால் குறைந்தபட்சம் ஓய்வூதியம் ரூ10,000, 25 ஆண்டுகள் பணிபுரிந்தால் ஓராண்டுக்கான சராசரி ஊதியத்தின் அடிப்படையில் 50% ஓய்வூதியமும் ஒருவர் இறந்து விட்டால் குடும்ப ஓய்வூதியமாக ஓய்வூதியத்தில் 60% வழங்குவதாக அறிவித்து உள்ளது. இதற்கான அரசு ஆணைகள் எதுவும் இன்னும் வரவில்லை இருந்தபோதிலும் செய்தி வெளியீடாக வந்ததின் அடிப்படையில் கீழ்க்கண்ட நிகழ்வுகள் நடப்பதற்கு சாத்தியம் அதிகம் உள்ளது.

இந்த திட்ட செய்தி வெளியீட்டின் படி திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது 01.04.2025 இல் தான் இந்தத் திட்டத்தில் விருப்பத்தின் அடிப்படையில் பணியாளர்கள் சேர்ந்து கொள்ளலாம். புதிய ஓய்வூதிய திட்டத்தில் அரசின் பங்களிப்பாக வழங்கப்படுகின்ற 14% UPS திட்டத்தில் 18% உயர்த்தப்படுவதாக அறிவித்துள்ளது. அப்படி இருக்கும் பட்சத்தில் தற்போது புதிய ஓய்வூதியத் திட்டத்தில் இருப்பவர்கள் UPS திட்டத்தில் இந்த காலங்களும் கணக்கிடப்பட்டு சேர்த்துக் கொள்ள வாய்ப்பு உள்ளதா? என்றால் அதற்கு வாய்ப்பு என்பது மிக மிகக் குறைவு என்பது தான் தெரிகிறது. ஏனென்றால் அரசின் பங்களிப்பு சதவீத விகிதம் மாறுபடுகிறது. அப்படிப் பார்த்தால் ஒரு பணியாளர் 01/04/2025-ல் பணியில் சேர்ந்தவர் தன் விருப்பத்தின்படி இந்த திட்டத்தில் சேர இயலும் குறைந்தது பத்தாண்டுகள் பணிபுரிந்து அவர் குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ 10,000 பெறலாம் அதாவது 30/04/2035 யில் தான் அந்த குறைந்தபட்ச ஓய்வூதியம் பெற இயலும்.

ஒருவர் 01.04.2025 அன்று பணியில் சேர்ந்து 25 ஆண்டுகள் நிறைவு பெற்று முழு ஓய்வூதியம் பெற வேண்டும் என்று சொன்னால் 30.04.2050 இல் தான் அவருக்கான அரசு அறிவித்துள்ள அந்த 50% ஓய்வூதியம் என்பது கிடைக்கும். ஓய்வூதியமாக கடைசியாக பெற்ற ஊதியத்தில் பாதி வழங்கப்பட்டு வந்த நிகழ்வு மாறி சராசரி ஊதியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது அதாவது ஒருவர் 25 ஆண்டுகள் பணிபுரிந்து கடைசி ஆண்டில் இரண்டு மாதங்களில் அவர் பதவி உயர்வு பெறுவதாக வைத்துக் கொண்டால் சராசரி ஊதியம் கணக்கிடும்பொழுது 10 மாதங்கள் கீழ்நிலை

பதவியில் பெற்ற ஊதியம் 2 மாதங்கள் உயர்நிலைப்பதவியில் பெற்ற ஊதியம் என எடுத்துக்கொண்டு கணக்கிடப்படும். ஆனால் பழைய திட்டத்தில் கடைசியாக பெற்ற ஊதியம் அதாவது கடைசி இரண்டு அல்லது ஒரு நாட்களில் கூட அவர் பதவி உயர்வு கிடைத்தால் அந்த ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதிய பலன்கள் பெறலாம்.

குடும்ப ஓய்வூதியம் ஒருவருக்கான குடும்ப ஓய்வூதியம் தற்போதுள்ள நடைமுறைப்படி கடைசியாக பெற்ற ஊதியத்தில் 30 % ஆனால் UPS திட்டத்தில் கடைசியாக பெறுகின்ற ஓய்வூதியத்தில் தான் 60% இதுவும் நமக்கு பயன் தராத ஒன்றுதான். நமக்கெல்லாம் தோன்றும் தமிழக அரசு எந்த ஓய்வூதியத்தையும் வழங்காத பட்சத்தில் இது பரவாயில்லை என்று ஆனால் நாம் எதிர்பார்ப்பது இதுவல்ல. வரையறுக்கப்பட்ட உத்தரவாதப்படுத்தப்பட்ட ஓய்வூதியத்தை தான் நாம் கேட்கின்றோமே தவிர இந்த புதிய திட்டத்தை (UPS) நாம் ஏற்கவில்லை.

இதில் இன்னொரு நிலைப்பாடு (மோசடி) என்னவென்று சொன்னால் ஒருவர் 25 ஆண்டுகள் அரசு பணியில் பணி புரிந்தால் சராசரியாக மாதம் ரூ60,000 ஊதியம் பெற்றால் ஊழியரின் பங்களிப்பு 10 % என்று சொன்னால் ரூ6000/- மாதத்திற்கு என்று வைத்துக் கொண்டால் 25 வருடங்களுக்கு தோராயமாக கணக்கிட்டால் 18 லட்சம் ரூபாய் 8 % வட்டியுடன் கணக்கிடப்பட்டால் ஒரு லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் ஆக மொத்தம் 19 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் அரசின் பங்களிப்பு 18 % என்று கணக்கிட்டால் மாதம் 10 ஆயிரத்து 800 ரூபாய் 25 வருடங்களுக்கு சந்தா தொகை 32 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் 8 % வட்டி என கணக்கிட்டால் ரூ2,59, 200 ஆக மொத்த நமது கணக்கில் ஓய்வு பெறுநாளன்று 54 லட்சத்து 43 ஆயிரத்து,200 ரூபாய் இருக்கும்.

நமக்கு ஓய்வூதியமாக கடைசியாக பெற்ற சராசரி ஊதியத்தின் அடிப்படையில் ரூ 30,000 வழங்கப்பட்டால் இந்த தொகை 15 ஆண்டுகளுக்கு வழங்கலாம். இந்த 15 ஆண்டுகளில் இந்தத் தொகை 8 % வட்டிக்கு கணக்கிடப்பட்டால் 65 லட்சத்து 31 ஆயிரத்து 840 ரூபாய் கிடைக்கும்.

நமக்குப் பிறகு குடும்ப ஓய்வூதியம் ஓய்வூதியத்தில் 60% என கணக்கிட்டால் ரூ18,000/- குடும்ப ஓய்வூதியமாக கிடைக்கும். சராசரி ஆயுட்காலத்தோடு கணக்கிடும் பொழுது பத்தாண்டுகள் வழங்கப்பட்டால் கூட 20 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் எப்படி பார்த்தாலும் அரசிடம் நாம் கட்டிய தொகை மீள நமக்கு வராது பகுதியான தொகைகள் மட்டுமே நாம் பெற இயலும் ஆகையால் இந்தத் திட்டம் எந்த சூழ்நிலையிலும் தற்போது பணிபுரிந்து கொண்டிருக்கின்ற அரசு ஊழியர்களுக்கு உதவாத திட்டம்தான் பார்க்கும் பொழுது தொகைகள் கூடுதலாக தெரியும் ஆனால் இந்த தொகைகளை பெறுகின்ற கால சூழ்நிலை அப்பொழுது நிலவுகின்ற நிதி பரிவர்த்திணைகள், பண மதிப்பீடுகள், சந்தை பொருளாதாரத்துடன் ஒப்பிடும்பொழுது மிக மிக குறைவான ஒரு தொகை தான் இருக்கும் தற்போது பெற்று வருகின்ற ஓய்வூதியத்திற்கு ஊதிய குழு மாற்றங்கள் ஏற்படும் பொழுது ஓய்வூதியம் மாற்றப்படும் சந்தை மதிப்பிற்கு நிகராக அகவிலைப்படி வழங்கப்படும்.

ஆனால் இது போன்ற எந்த விதமான காரணிகளும் இதற்கு பொருந்தாது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டியிருக்கிறது. எப்படி பார்த்தாலும் பழைய ஓய்வூதிய முறை தான் சாலச்சிறந்தது அதைப் பெற ஒன்றிணைந்து பயணிப்போம்.

களம் காண்போம்!! ஊழியர்களின் நலனுக்காக களம் காண்போம்!!! பழைய ஓய்வூதியத்தை மீண்டும் பெறுவோம். ●

# போராடும் சாம்சங் தொழிலாளர்களுக்கு ஆதரவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 1.10.2024 அன்று ஆர்ப்பாட்டம்

**திண்டுக்கல்**

போராடும் சாம்சங் தொழிலாளர்களுக்கு ஆதரவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் முபாரக் அலி தலைமை தாங்கினார் மாவட்ட செயலாளர் சுகந்தி மாவட்ட துணைத் தலைவர் ராஜமாணிக்கம் மாவட்ட இணை செயலாளர் மகாலிங்கம் உள்ளிட்ட நிர்வாகிகள் அரசு ஊழியர்கள் பங்கேற்றனர்

**திருவாரூர்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திருவாரூர் மாவட்டத்தின் சார்பாக சாம்சங் தொழிற்சாலை ஊழியர்கள் போராட்டத்திற்கு ஆதரவு ஆர்ப்பாட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகம் முன்பு மாவட்டத் தலைவர் தோழர் எஸ்.செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்றது . இதில் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் வட்டக்கிளை நிர்வாகிகள் துறைவாரி சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார், தமிழ்நாடு அரசு ஊழியர்சங்க மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் வெ.சோமசுந்தரம் நிறைவுறியாற்றினார் , மாவட்ட பொருளாளர் வீ.தெட்சிணாமூர்த்தி நன்றி உரை கூறினார்.

**மதுரை**

01.10.2024 (செவ்வாய்க்கிழமை) மதுரை பொதுப்பணித்துறை வளாகம், தல்லாகுளத்தில் காலை 11:30மணிக்கு நடைபெற்றது. தலைமை ஜெ.மூர்த்தி மாவட்டத்தலைவர், கோரிக்கை விளக்கவுரை க.நீதிராஜா மாவட்டச்செயலாளர், மாவட்ட நிர்வாகிகள் வட்டக்கிளை நிர்வாகிகள் மற்றும் துறைவாரிச்சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்ட கண்டன உரை மொ.ஞானத்தம்பி, மாநிலத்துணைத்தலைவர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், நன்றி க.சந்திரபோஸ, மாவட்டப்பொருளாளர். ●

# நூல் வெளியீடு, எழுத்தாளர்களுக்கு பாராட்டு





நாகப்பட்டினம் மாவட்ட நிர்வாகம் சார்பில் மூன்றாவது புத்தகத் திருவிழாவில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் சிறுகதையுடன் கூடிய, நாகப்பட்டினம் மாவட்ட சிறுகதை எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது. அதில் கீழ்வேளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தோழர் வி.பி.நாகைமாலி, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகப்பட்டினம் மாவட்டச் செயலாளர் தோழர் அ.தி. அன்பழகன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க முன்னணி தோழர் ப.ஜீவானந்தம் ஆகியோரின் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

எழுத்தாளர்களை கௌரவிக்கும் விதமாக ரூபாய் ஐந்தாயிரத்திற்கான காசோலை, பாராட்டு கேடயம் மற்றும் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார்.

தோழர் அ.தி.அன்பழகன் அவர்கள் எழுதிய கந்தசாமிக்கு வந்த அரசாங்கக் கடிதம் சிறுகதை ஏற்கனவே நமது அரசு ஊழியர் இதழில் வெளிவந்துள்ளது என்பது அந்த கதை நாடகங்களாக நமது மாநில மகளிர் மாநாடு உட்பட பல நிகழ்வுகளில் நாடகமாக நாகப்பட்டினம் அரசு ஊழியர் கலைக்குழு சார்பில் நடத்தப்பட்டு பாராட்டுகளை பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. ●

# 22.09.2024 அன்று நடைபெற்ற

# ஜாக்டோ ஜியோ

## மாநில ஒருங்கிணைப்பாளர்கள் கூட்ட முடிவுகள்

ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் சென்னை திருவல்லிக்கேணி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க அலுவலகத்தில் 22.09.2024 ஞாயிற்றுக்கிழமை மாநில ஒருங்கிணைப்பாளர்கள் திரு. மு. அன்பரசு, திரு. இரா. தாஸ், திரு. சே. பிரபாகரன் ஆகியோர் கூட்டுத் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. 2024 பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் 40 தொகுதிகளிலும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலான இந்தியா கூட்டணி வெற்றி பெற்றதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

2. கடந்த 14.02.2024ல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் சந்திப்பில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள்-பணியாளர்களுக்கு 2021 சட்டமன்றத் தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக மீண்டும் வாக்குறுதி அளித்த பின்புலத்தில், தேர்தல் கால வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்றிட வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் சந்திப்பது என முடிவு செய்யப்பட்டது.

3. பாஜக தலைமையிலான ஒன்றிய அரசு, இந்திய இறையாண்மைக்கும் அரசியலமைப்பிற்கும் எதிராக பாஜக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் ஆட்சியில் இல்லாத மாநில அரசுகளுக்கு விடுவிக்க வேண்டிய நிதியினை விடுவிக்காமல் காலம் தாழ்த்தி வருகிறது. அதிலும், குறிப்பாக

- 2023 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சென்னை மற்றும் தூத்துக்குடி-நெல்லை மாவட்டங்களில் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ள பாதிப்பிற்காக ரூ.37902 கோடி நிதியினைக் கோரியபோது, தற்போது வரை வெறும் ரூ.276 கோடி மட்டுமே வழங்கியிருப்பது
- சென்னைப் பெருநகர இரண்டாம் கட்ட மெட்ரோ பணிகளுக்கு நிதியினை வழங்காமல் மறுப்பது
- ஒன்றிய அரசின் தேசிய கல்விக் கொள்கையினை நடைமுறைப்படுத்த சம்மதித்தால் மட்டுமே, பிஎம்ஸ்ரீ திட்டத்தின் கீழ் நிதியினை விடுவிக்க முடியும் என நிபந்தனை விதித்து தமிழக மாணாக்கர்களின் கல்விக் கனவினை சிதைப்பது
- தமிழ்நாட்டில் இந்திய இரயில்வேத் துறையினால் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டங்களுக்கான நிதியினை 2024-25 ஆம் ஆண்டில் முழுமையாக வெட்டியிருப்பது.

போன்று பல்வேறு நிதிப் பகிர்வுகளை தமிழ்நாட்டிற்கு வழங்காமலும் உரிய நேரத்திற்கு விடுவிக்காமலும் வஞ்சிக்கும் ஒன்றிய பாஜக அரசை ஜாக்டோ ஜியோ வன்மையாகக் கண்டிக்கிறது. கூட்டாட்சி மரபுகளின் அடிப்படையில், தமிழ்நாட்டிற்கு உரிய நிதியினை உரிய காலத்தில் வழங்கிட வேண்டும் என்று ஜாக்டோ ஜியோ ஒன்றிய அரசைக் கேட்டுக் கொள்கிறது.

4. கடந்த மாதத்தில் விருப்ப ஓய்வில் சென்ற திரு. மு. அன்பரசு அவர்கள் ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, அவருக்கு பதிலாக, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் (பொறுப்பு) திரு. சா. டானியல் ஜெயசிங் மாநில ஒருங்கிணைப்பாளராக இணைக்கப்பட்டார்.

# வட்ட மாநாடுகள்

## தஞ்சை மாவட்டம்

**ஒரத்தநாடு**

14.09.2024 அன்று ஒரத்தநாடு வட்ட மாநாடு, வட்டத் தலைவர் தோழர் N.நாகராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் தோழர் B.முருகன், AISGEF கொடியினையும் மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் A.R.கவிதா TNGEA கொடியினையும் ஏற்றி வைத்தனர். ஒரத்தநாடு வட்டாட்சியர் தோழர் T.S.சுந்தரவள்ளி மாநாட்டினை துவங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். வட்டச் செயலாளர் தோழர் V.தம்பி அய்யா வேலை அறிக்கையினையும், வட்டப்பொருளாளர் தோழர் G.ராதாகிருஷ்ணன் வரவு செலவு அறிக்கையினையும், மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் S.கலா, மகளிர் துணைக்கழு அறிக்கையினையும் வைத்தனர். மாவட்டத் தலைவர் தோழர் B.முருகன், மாவட்டச் செயலாளர் தோழர் A.ரெங்கசாமி, மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் A.R.கவிதா, முன்னாள் மாவட்ட இணைச்செயலாளர் தோழர் S.அறிவழகன், முன்னாள் வட்டத் தலைவர் தோழர் R.சிற்றரசு, தஞ்சை வடக்கு வட்டச் செயலாளர் தோழர் C.அஜய்ராஜ், நெடுஞ்சாலைத்துறை சாலை ஆய்வாளர் சங்க மாவட்டத் தலைவர் தோழர் R.முருகானந்தம், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க ஒன்றியத் தலைவர் தோழர் R.வாசுதேவன் உள்ளிட்ட பல்வேறு சங்க நிருவாகிகள் வாழ்த்துரை வழங்கினார்கள். மாநிலச் செயலாளர் தோழர் S.கோதண்டபாணி சிறப்புரை ஆற்றினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் தோழர் S.பிரபு நன்றி கூறினார். இந்த வட்ட மாநாட்டில் 55 பெண்கள் 40 ஆண்கள் என மொத்தம் 95 பேர் கலந்து கொண்டனர்.

**பட்டுக்கோட்டை**

17.09.2024 அன்று பட்டுக்கோட்டை வட்ட மாநாடு வட்டத்தலைவர் தோழர் P.அறிவழகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் மாவட்டத் தலைவர் தோழர் S.ரவிச்சந்திரன் TNGEA கொடியினையும், மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் A.R.கவிதா AISGEF கொடியினையும் ஏற்றி வைத்தனர். முன்னாள் மாவட்டத்தலைவர் தோழர் S.ரவிச்சந்திரன் துவக்கவுரையாற்றினார். வட்டச்செயலாளர் தோழர் D.ஜெயக்குமார் வேலை அறிக்கையினையும், வட்டப்பொருளாளர் தோழர் S.கோகுலரமணன் வரவு செலவு அறிக்கையினையும் மகளிர் துணைக்குழு அறிக்கையினை மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் N.ரேகா அவர்களும் வைத்தனர். முன்னாள் வட்டச் செயலாளர் தோழர் R.ஞானசூரியன், தஞ்சை வடக்கு வட்டச் செயலாளர் தோழர் C.அஜய்ராஜ், ஒரத்தநாடு வட்டச் செயலாளர் தோழர் V.தம்பி அய்யா, மாவட்டத்தலைவர் தோழர் B.முருகன், மாவட்டச் செயலாளர் தோழர் A.ரெங்கசாமி, மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் A.R.கவிதா, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்க மாவட்டத் துணைத்தலைவர் தோழர் N.தனபால், ஒய்வு பெற்ற வருவாய் கிராம உதவியாளர் சங்க மாவட்டத்தலைவர் தோழர் S.தன்ராஜ், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் தோழர் A.வீராசாமி, தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள், சங்க முன்னாள் மாவட்டச் செயலாளர் தோழர் K.கோவிந்தராஜ் உள்ளிட்ட பல்வேறு சங்க தோழர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். இந்த வட்ட மாநாட்டில் பணி ஓய்வு பெற்ற மாவட்டத் தலைவர் தோழர் S.ரவிச்சந்திரன், வட்ட இணைச் செயலாளர் தோழர் V.கிருஷ்ணமூர்த்தி

ஆகியோருக்கு நினைவு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது. மாவட்டப்பொருளாளர் தோழர் K.பாஸ்கரன் நிறைவுரை ஆற்றினார். வட்டத் துணைத்தலைவர் தோழர் T.ரவிச்செல்வன் நன்றி கூறினார். இந்த வட்ட மாநாட்டில் 35 பெண்கள் 47 ஆண்கள் என 82 பேர் கலந்து கொண்டனர்.

**பேராவூரணி**

20.09.2024 அன்று பேராவூரணி வட்ட மாநாடு வட்டத் தலைவர் தோழர் A.நாவலரசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட இணைச் செயலாளர் தோழர் ஸ்ரீ. மகேஷ் துவக்கவுரை ஆற்றினார். வட்ட செயலாளர் தோழர் R.ரமேஷ் வேலை அறிக்கையினையும், வட்டப் பொருளாளர் தோழர் M.K.முத்துராமன், வரவு செலவு அறிக்கையினையும் வைத்தனர். முன்னாள் மாவட்டத் தலைவர் தோழர் S.ரவிச்சந்திரன் வாழ்த்துரை வழங்கினார். மாவட்டச் செயலாளர் தோழர் A.ரெங்கசாமி சிறப்புரை ஆற்றினார். இந்த வட்ட மாநாட்டில் 25 பெண்கள் 15 ஆண்கள் என மொத்தம் 40 பேர் கலந்து கொண்டனர்.

**தஞ்சை தெற்கு**

21.09.2024 அன்று தஞ்சை தெற்கு வட்ட மாநாடு வட்டத் தலைவர் தோழர் T.R.சங்கர்கணேஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. TNGEA கொடியினை மாவட்டத் தலைவர் தோழர் B.முருகன் அவர்களும், AISGEF கொடியினை மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் A.R.கவிதா அவர்களும் ஏற்றி வைத்தனர். மாவட்டத்தலைவர் தோழர் B.முருகன் துவக்கவுரை ஆற்றினார். வட்டச் செயலாளர் தோழர் A.தமிழ்மாறன் வேலை அறிக்கையினையும், வட்டப்பொருளாளர் தோழர் 1.சௌரிநாயகம் வரவு செலவு அறிக்கையினையும் வட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் D.ஜெயலெட்சுமி மகளிர் துணைக்குழு அறிக்கையினையும் வைத்தனர். முன்னாள் மாநிலச் செயலாளர் தோழர் R.பன்னீர்செல்வம், முன்னாள் மாவட்டத்துணைத்தலைவர் தோழர் S.செல்வி, தமிழ்நாடு உள்ளாட்சி நிதிதணிக்கைப்பணி மன்றத்தின் மாநிலத் தலைவர் தோழர் P.அம்பேத்கார், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்டத் தலைவர் தோழர் B.பார்த்தசாரதி, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் தோழர் T.ராமச்சந்திரன், தஞ்சை வடக்கு வட்டத் தலைவர் தோழர் M.சுப்பிரமணியன், நீலகிரி மாவட்டச் செயலாளர் தோழர் S.அற்புதராஜ் ரூஸ்வெல்ட், உள்ளிட்ட பல்வேறு சங்க நிருவாகிகள் வாழ்த்துரை வழங்கினார்கள். அதன்பிறகு, சங்கப்பணிகளும் மகளிர் பங்கேற்பும்" என்றத் தலைப்பில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்க மாநிலத் துணைத் தலைவருமான தோழர் க.பாலபாரதி அவர்கள் கருத்துரை வழங்கினார். மாவட்டச் செயலாளர் தோழர் A.ரெங்கசாமி, நிறைவுரை ஆற்றினார். வட்ட இணைச்செயலாளர் தோழர் S.சித்திரைச்செல்வன் நன்றி கூறினார். இந்த வட்ட மாநாடு முழு நாள் மாநாடாக நடைபெற்றது. இந்த வட்ட மாநாட்டில் 75 பெண்கள் 40 ஆண்கள் என மொத்தம் 115 பேர் கலந்து கொண்டனர்.

**கும்பகோணம்**

21.09.2024 அன்று பிற்பகல் கும்பகோணம் வட்ட மாநாடு வட்டத்தலைவர் தோழர் P.வெங்கடேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. TNGEA TNGEA கொடியினை மாவட்ட இணைச்செயலாளர் தோழர் A.தமிழ்வாணன் அவர்களும், AISGEF கொடியினை மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் A.R.கவிதா அவர்களும் ஏற்றி வைத்தனர். மாவட்டத்தலைவர் தோழர் B.முருகன் துவக்கவுரை ஆற்றினார். வட்டச்செயலாளர் தோழர் P.பிரபாகரன் வேலை அறிக்கையினையும், வட்டப்பொருளாளர் தோழர் R.மதியழகன் வரவு செலவு அறிக்கையினையும், மகளிர் துணைக்குழு அறிக்கையினை மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் S.புவனேஷ்வரி அவர்களும் வைத்தனர். மாவட்ட மகளிர்

துணைக்குழு அமைப்பாளர் தோழர் A.R.கவிதா, மாவட்ட இணைச்செயலாளர்கள் தோழர் A.தமிழ்வாணன் மற்றும் A.செந்தில்குமார், தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர்கள் வட்டத் தலைவர் தோழர் A.துரைராஜ், சாலை ஆய்வாளர் மண்டலச் செயலாளர் தோழர் G.கண்ணன், தமிழ்நாடு MRB செவிலியர் மேம்பாட்டுச் சங்க மாவட்டத் தலைவர் தோழர் S.காந்தி, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க ஒன்றிய தலைவர் தோழர் M.செந்தாமரை, கால்நடை ஆய்வாளர் சங்க கோட்டச் செயலாளர் தோழர் T.N.ஜெகதீஸ், அனைத்து மருந்தாளுநர் சங்க மாநில அமைப்புச் செயலாளர் தோழர் A.விஸ்வேஸ்வரன், தமிழ்நாடு புள்ளியில் சார்நிலை அலுவலர் சங்க மாநில பொதுச் செயலாளர் தோழர் R.ரமேஷ், தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்க மாவட்டத்தலைவர் தோழர் S.மீனாட்சி, தஞ்சை தெற்கு வட்டத் துணைத்தலைவர் தோழர் T.R.சங்கர்கணேஷ் உள்ளிட்ட பல்வேறு சங்க நிருவாகிகள் வாழ்த்துரை வழங்கினார்கள். அதன்பிறகு "ஊழியர் விரோத ஒருங்கிணைந்த (UPS) ஓய்வூதிய திட்டம்" என்றத் தலைப்பில், தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை பணி மன்றத்தின் மாநிலத் தலைவர் தோழர் P.அம்பேத்கார் கருத்துறை வழங்கினார். மாவட்டச் செயலாளர் தோழர் A.ரெங்கசாமி சிறப்புரை ஆற்றினார். மாவட்டச் செயற்குழு உறுப்பினர் தோழர் V.தசரதேவ் நன்றி கூறினார். இந்த வட்ட மாநாட்டில் 55 பெண்கள் 42 ஆண்கள் என மொத்தம் 97 பேர் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரி மாவட்டம்

### ஓசூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், கிருட்டினகிரி மாவட்டம், ஓசூர் வட்ட கிளையின் வட்ட மாநாடு 28.09.2024 அன்று காயத்ரி திருமண மண்டபத்தில் காலை 10:30 மணிக்கு தொடங்கியது. மாநாட்டின் முதல் நிகழ்வாக கொடியேற்ற நிகழ்ச்சி நடைபெற்றது. தியாகிகள் ஸ்தூபிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு வட்ட மாநாடு துவங்கப்பட்டது. வட்ட மாநாட்டிற்கு வட்ட தலைவர் தோழர் M.சிவா அவர்கள் தலைமை தாங்கினார்.

வட்ட இணை செயலாளர் தோழர் S.ஹேமாநந்தினி தேவி, அவர்கள் அஞ்சலி உரையாற்றினார். வட்ட இணை செயலாளர் தோழர் M.சுரேஷ்குமார் வரவேற்புரையாற்றினார். மாவட்ட துணை தலைவர் தோழர். K.ஜெயலட்சுமி அவர்கள் வட்ட மாநாட்டை துவக்கவுரையாற்றி துவக்கி வைத்தார். செயலாளர் அறிக்கையினை வட்ட செயலாளர் தோழர் M. திம்மராஜ் அவர்கள் சமர்பித்தார், பொருளாளர் அறிக்கையினை தோழர் P.ஆண்டனிராஜன் அவர்களும் சமர்பித்தனர்.

அறிக்கை மீதான விவாதத்திற்கு பிறகு தொகுப்புரை வழங்கப்பட்டு ஏகமனதாக அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. துறைவாரி சங்க தலைவர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கி மாநாட்டை சிறப்பித்தனர். கோரிக்கை தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கை தீர்மானங்கள் முன்மொழிந்து ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இம்மாநாட்டில் புதிய நிர்வாகிகள் முன்மொழியப்பட்டு தேர்வு செய்யப்பட்டனர். மாவட்ட செயலாளர் தோழர் சி.கல்யாணசுந்தரம், சிறப்புரை வழங்கினார், மாவட்ட தலைவர் தோழர் B. சந்திரன் அவர்கள் நிறைவுரையாற்றினார்.

புதியதாக தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகள் தலைவர் : தோழர். M. திம்மராஜ், நெடுஞ்சாலை துறை. துணை தலைவர்கள்: 1) தோழர். M.சுரேஷ் குமார், மாநகராட்சி 2) தோழர் K. தேவிசோனா, கூட்டுறவு துறை. செயலாளர்: தோழர்.S. ஹேமாநந்தினிதேவி, பட்டு வளர்ச்சி துறை. இணை செயலாளர்கள்: 1) P. ஆன்டனிராஜன், பொது சுகாதாரம், 2) K.மதியழகன், ITI. 3) R. வெங்கடேசன், மாநகராட்சி. பொருளாளர்: தோழர் A. அருண்குமார், பொது சுகாதாரம். மாவட்ட செயற்குழு உறுப்பினர்: R.பைரப்பா,

கால்நடை துறை. தணிக்கையாளர் : 1) தோழர் N.ராதா, சத்துணவு திட்டம், 2) தோழர் M.சுரேஷ், மாநகராட்சி. தோழர் N.ராதா, அவர்கள் நன்றி கூறி மாநாட்டை நிறைவு செய்தார்.

**தேன்கனிக்கோட்டை**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், கிருட்டினகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்ட கிளையின் வட்ட மாநாடு 04.10.2024 அன்று S.A.P. திருமண மண்டபத்தில் பிற்பகல் 02:00 மணிக்கு தொடங்கியது. மாநாட்டின் முதல் நிகழ்வாக கொடியேற்ற நிகழ்ச்சி நடைப்பெற்றது. தியாகிகள் ஸ்தூபிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு வட்ட மாநாடு துவங்கப்பட்டது. வட்ட மாநாட்டிற்கு வட்ட துணை தலைவர், தோழர் K.S.கதிரவன், அவர்கள் தலைமை தாங்கினார்.

வட்ட இணை செயலாளர், தோழர். P. பிரவீன், அவர்கள் அஞ்சலி உரையாற்றினார். வட்ட இணை செயலாளர் தோழர் J.சாந்தி அவர்கள் வரவேற்புரையாற்றினார். மாவட்ட துணை தலைவர் தோழர் S.முருகேசன், அவர்கள் வட்ட மாநாட்டை துவக்கவுரையாற்றி துவக்கி வைத்தார். செயலாளர் அறிக்கையினை வட்ட செயலாளர்(பொ) தோழர் உ.சம்சுல் ஆலம், அவர்கள் சமர்பித்தார், பொருளாளர் அறிக்கையினை தோழர் உ.சும்சுல் ஆலம், வட்ட பொருளாளர், அவர்களும் சமர்பித்தனர்.

அறிக்கை மீதான விவாதத்திற்கு பிறகு தொகுப்புரை வழங்கப்பட்டு ஏகமனதாக அறிக்கைக்கு ஒப்புதல் பெறப்பட்டது. துறைவாரி சங்க தலைவர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கி மாநாட்டை சிறப்பித்தனர். கோரிக்கை தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கை தீர்மானங்கள் முன்மொழிந்து ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இம்மாநாட்டில் புதிய நிர்வாகிகள் முன்மொழியப்பட்டு தேர்வு செய்யப்பட்டனர். மாவட்ட செயலாளர் தோழர் சி.கல்யாணசுந்தரம், சிறப்புரை வழங்கினார், மாவட்ட தலைவர் தோழர் B.சந்திரன் அவர்கள் நிறைவுரையாற்றினார்.

புதியதாக தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகள்.தலைவர்: தோழர் K.S. கதிரவன், பொது சுகாதாரத்துறை. துணை தலைவர்கள்: தோழர்கள். 1)T.பாலசுப்பிரமணியம், கிராம நிர்வாக அலுவலர். 2) கோ.மோகன், நில அளவை துறை. செயலாளர்: தோழர் உ. சும்சுல்ஆலம். தோழர்கள். 1) அ. அம்புஜம்மா, ஊரக வளர்ச்சி துறை. 2) P.ஸ்டாலின், சமூக நலத்துறை. 3) S.நாகேந்திரகுமார், போரூராட்சி துறை. பொருளாளர்: தோழர் J.சாந்தி, சத்துணவு திட்டம். மாவட்ட செயற்குழு உறுப்பினர்: தோழர் P.பிரவீன். நிறைவாக வட்ட இணை செயலாளர் தோழர் P.ஸ்டாலின் அவர்கள் நன்றி கூறி மாநாட்டை நிறைவு செய்தார்.

**கிருஷ்ணகிரி**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், கிருட்டினகிரி மாவட்டம், கிருட்டினகிரி வட்ட கிளையின் வட்ட மாநாடு 06.10.2024 அன்று பிரஸ்கிளப் கூட்ட அரங்கில் காலை 10:00 மணிக்கு தொடங்கியது. மாநாட்டின் முதல் நிகழ்வாக கொடியேற்ற நிகழ்ச்சி நடைப்பெற்றது. தியாகிகள் ஸ்தூபிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு வட்ட மாநாடு துவங்கப்பட்டது. வட்ட மாநாட்டிற்கு வட்ட தலைவர் தோழர் G.வெங்கடேசன், அவர்கள் தலைமை தாங்கினார்.

வட்ட துணை தலைவர் தோழர் K.தேவன், அவர்கள் அஞ்சலி உரையாற்றினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் கு.சங்கதமிழன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். மாவட்ட இணை செயலாளர். தோழர் A.மணி, அவர்கள் வட்ட மாநாட்டை துவக்கவுரையாற்றி துவக்கி வைத்தார். செயலாளர் அறிக்கையினை வட்ட செயலாளர் தோழர் K பெருமாள், அவர்கள் சமர்ப்பித்தார், பொருளாளர் அறிக்கையினை தோழர் M.செல்வகுமார், அவர்களும் சமர்பித்தனர்.

அறிக்கை மீதான விவாதத்திற்கு பிறகு தொகுப்புரை வழங்கப்பட்டு ஏகமனதாக அறிக்கைக்கு ஒப்புதல் பெறப்பட்டது. துறைவாரி சங்க தலைவர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கி மாநாட்டை சிறப்பித்தனர். கோரிக்கை தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கை தீர்மானங்கள் முன்மொழிந்து ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இம்மாநாட்டில் புதிய நிர்வாகிகள் முன்மொழியப்பட்டு தேர்வு செய்யப்பட்டனர். மாவட்ட செயலாளர் தோழர் சி.கல்யாணசுந்தரம், தோழர் K.ராமசந்திரன், மாவட்ட து.தலைவர், தோழர் M.நந்தகுமார், மாவட்ட பொருளாளர், தோழர் K.ஜெகதாம்பிகா, மாவட்ட மகளிர் துணைகுழு அமைப்பாளர், தோழர் R.M. மஞ்சுளா, ஆகியோர் சிறப்புரை வழங்கினார்கள், மாவட்ட தலைவர் தோழர் B.சந்திரன் அவர்கள் நிறைவுரையாற்றினார்.

தேர்வு செய்யப்பட்ட புதிய நிர்வாகிகள். தலைவர்: தோழர் P.சென்னப்பன், ஊரக வளர்ச்சி துறை. துணை தலைவர்கள்: தோழர்கள். 1) M.குமரேசன், வருவாய்த்துறை. 2) R.ஜெயசீலன், பொது சுகாதாரம். செயலாளர் : தோழர் K. பெருமாள், மருத்துவ துறை. 1) G.ரவிகுமார், கூட்டுறவுத்துறை. 2) J.ஹரிஷ்பாபு, புள்ளியியல் துறை. 3) P.ஆனந்தகுமார், நகராட்சி துறை. பொருளாளர்: தோழர் S.சுமதி, சத்துணவு திட்டம். மாவட்ட செயற்குழு உறுப்பினர்: தோழர். M.செல்லவகுமார், பட்டு வளர்ச்சித்துறை. தணிக்கையாளர்கள்: தோழர்கள். 1) A.மணிவண்ணன், பொது சுகாதாரம். 2) G.பாலகிருஷ்ணன், நெடுஞ்சாலைத்துறை. நிறைவாக வட்ட இ.செயலாளர் தோழர் K.சின்னசாமி அவர்கள் நன்றி கூறி மாநாட்டை நிறைவு செய்தார். ●

# வாசகர் கடிதம்

**- ம.அந்தோணிசாமி**

ஆசிரியர் குழுவிற்கு வணக்கம். தலையங்கம் ஊழியர்களின் உணர்வுகளை மிகத் தெளிவாக வெளிப்படுத்தி உள்ளது. ஒன்றுபட்ட வலிமையான போராட்டமே இன்றைக்கு தேவை என்பதை காலம் நமக்கு சுட்டிக்காட்டி உள்ளது. பொதுச்செயலாளர் மேஜையில் இருந்து வந்திருக்கக்கூடிய கட்டுரை சமூகத்தில் ஏற்பட்டிருக்கக் கூடிய எதார்த்தமும் இளைஞர்கள் மத்தியில் ஒரு ஏக்க பெருமூச்சு மற்றும் கோபமும் இருப்பதை வெளிப்படுத்தி உள்ளது. மு பாஸ்கரன் அவர்களின் கட்டுரை கடந்த காலங்களில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் முன்னெடுத்த மனிதநேயப் பணிகளை பட்டியலிட்டுள்ளது. இளம் ஊழியர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகவும் மனிதநேய சிந்தனை வளர்ப்பதாகவும் உள்ளது என்.வேல்முருகன் அவர்களின் கவிதை அருமை மேனாள் மாநில தலைவர் மு அன்பரசு அவர்களின் கட்டுரை போராட்ட உணர்வை தூண்டக் கூடியதாக உள்ளது.

முன்னாள் மாநிலத் துணைத் தலைவர் கே எம் தியாகராஜன் அவர்களின் பழைய ஓய்வூதியமே நிரந்தர தீர்வு என்ற கட்டுரை இன்னும் கூடுதல் விவரங்களோடு அமைந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். கிருஷ்ணப்பிரியா அவர்களின் கவிதை இந்த இதழில் இல்லாதது வெறுமை. அடுத்த இதழில் தொடரட்டும். மாவட்ட நிகழ்ச்சிகள் தொகுக்கப்பட்டுள்ளதற்கு வாழ்த்துக்கள். ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com

# தேர்தல்கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி அனைத்து அரசு அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் 19.09.2024




































Registered Postal Registration No. TN/CH/(C)/200/2024-2026 WPP.No.TN/PMG(CCR)/
WPP-431/2024-2026 RNI No.68584/81 Posted at Egmore RMS-1 Pathirika Channel
Date of Publication 1st Week of Every Month - Posted on 10.10.2024

# சாம்சங் தொளிலாளர்களுக்கு பாதுகாப்பு நிதியளிப்பு



## 15 ஆம் மாநில மாநாடு வரவேற்புக்குழு அமைப்புக் கூட்டம் 21.09.2024







## ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் 22.09.2024






இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அலுவலர் சங்கத்தின்
மாநிலப் பொதுக்குழுக் கூட்டம் 21.09.2024



தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப்பணியாளர் சங்கத்தின்
வெள்ளிவிழா சிறப்பு மாநில மாநாடு 17.09.2024






Printed and Published by M.Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai-600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai-600002.
Editor: A.SELVAM. Phone: 28441286 E-mail: arasuoozhiyar@gmail.com